For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மார்ச் 2025 • திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • விலை : ரூ 60 • இதழ் 58




## இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர் நஷ்டப்பட்டதில்லை!

சகோ. எமில் ஜெபசிங்

https://christianhistoricalsociety.in/

# பதிப்பாசிரியரிடமிருந்து...

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்**

'இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர் - நஷ்டப்பட்டதில்லை!' கிறிஸ்துவின் அன்பிற்கு அடிபணிந்து பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பணியாற்றிய மிஷனெரிகளின் நினைவிடங்களைத் தேடி, இன்றைய அவர்களுடைய வாரிசுகள் தேடி வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், கடந்த மாதம் ஹென்றி பவரின் வாரிசு வருகை தந்தது மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. லெந்து நாட்களில் திருச்சபை வரலாற்றை மக்களுக்குக் கொண்டு செல்லும் நோக்கத்தில் சனிக்கிழமைகளில் வரலாற்றுச் சுற்றுப்பயணம் சங்கத்தின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்திக்கொள்ளவும். இம்மாத இதழில் ஈரோடு மாவட்ட வரலாற்றுத் தொகுப்பின் சிறப்பிதழ் வெளியாகியுள்ளது.

அடுத்த இதழ்களில் வெளிவராத பிற மாவட்ட வரலாற்றுத் தொகுப்புகள் வெளிவர இருக்கின்றன. எனவே வாசகர்கள் மற்றவர்களுக்கு இதழை அறிமுகப்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு. புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக்கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். இயன்றவர்கள் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து உதவ அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதழுக்கான நன்கொடை மற்றும் சந்தா விவரம் இதழின் உள்ளே கொடுக்கப்பட்டுள்ளது, பயன்படுத்திக்கொள்ளவும்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியக கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. வரும் மே மாதம் திறப்பு விழாவைக் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். தேவைகள் அதிகம். தொடர்ந்து நன்கொடை அளித்து உதவவும், ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பராபரனின் பணியில்

*Manna Selvakmuar*


**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு


G Pay


கிறிஸ்தவ
**வரலாற்றுச் சுவடுகள்**


**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள **G-Pay** மூலம் நன்கொடை செலுத்த 90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும் காசோலை மற்றும் வரைவோலை செலுத்த "கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" ( CHRISTAVA VARALATRU SUVADUGAL ) என்ற பெயரில் எடுக்கவும்

**Contact Us**


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு, சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,



+91 9176780001 www.christianhistoricalsociety.in

# தேடி வந்த வாரிசு..

## நெல்லையில் நெகிழ்ச்சி சம்பவம்

மன்னா செல்வகுமார்




நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு மிஷனெரியாகவும், வேதாகம மொழிபெயர்ப்பாளராகவும் பணி செய்து மறைந்த தனது பாட்டனார் நினைவிடத்தை தேடி அவருடைய வாரிசு வந்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஆங்கிலோ-இந்திய மிஷனரியாக பணியாற்றிய அருள்திரு. ஹென்றி பௌவர், டி. டி. சென்னையில் பிறந்தவர்-1812 பாளையம்கோட்டையில் அடக்கம் செய்யப்பட்டவர்-1885. (இவருடைய தகப்பனார் பிரான்சிஸ் பௌவர் 1824- ஜஸ்டினியா.) மனைவி எம்மா டெய்லர்-1844, பின்னர் எலிசா ஜெஸ்ஸி பிளாக்கர்- 1862 மணந்தார்.

பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்களை தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்தியவர். மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முதன்மை தமிழ் ஆய்வாளராக பணி செய்தவர். வேப்பரி செமினரி-ல் வெஸ்லியன் மிஷனரி சொசைட்டியின் உபதேசியார் மற்றும் உதவி மிஷனரியாகவும். 1845 இல் குருவனவரகவும் மற்றும் வேதியர்புரம், மெட்ராஸ், கும்பகோணத்திலும் குருவானவராக பணியாற்றினார்.

1858 ம் ஆண்டு சென்னை வேதாகம சங்கம் பௌவர் ஐயர் தலைமையில் மொழி பெயர்ப்பு பணியை தொடங்கியது. 1861 ம் ஆண்டு ஏப்ரல் 29 ம் நாள் பிரதிநிதிகளின் கூட்டம் பாளையம்கோட்டையில் நடைபெற்றது. பௌவர் ஐயர் தலைமையில் திருத்திய புதிய ஏற்பாடு 1864 ம் ஆண்டிலும், பழைய ஏற்பாடு 1867 ம் ஆண்டிலும் பிரசுரமாயிற்று. முழு வேதாகமமும் 1871 ம் ஆண்டு வேதாகம சங்கத்தாரின் சார்பில் வேப்பேரியில் அமைந்திருந்த டயோசீசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தன. 'ஐக்கிய திருப்புதல்' என்ற பெயரில் வந்தது. இன்று வரை பௌவர் மொழிபெயர்ப்பு வேதாகமத்தை நாம் பயன்படுத்தி வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று (16.02.2025) பாளையம்கோட்டை மில்டரி லைன் ஆலய வளாகத்திற்கு வந்த அவருடைய வாரிசு மிஸ். சார்லோட் பௌவர் அவர்களை சேகரத்தின் சார்பில் வரவேற்று மகிழ்ந்தார்கள். மிஸ். சார்லோட் பௌவர் அவர்கள் மிஷனெரி ஹென்றி பௌவர் செய்த பணிகளை நினைவுகூர்ந்தார்கள். அவருடைய நினைவிடத்தில் எடுத்த புகைப்படம்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தில் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# மிஷன் சுற்றுப்பயணம்

www.christianhistoricalsociety.in

தென்னிந்திய திருச்சபை கர்நாடக மத்திய திருமண்டலம் ஆல் செயிண்ட்ஸ் சர்ச் (All Saints Church Karnataka Central Diocese) சேகர பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக தென் தமிழகத்தில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு திருச்சபையின் போதகர் அருள்திரு. தியோடர் வில்லியம் அவர்கள் தலைமையில் சுமார் 16 பேர் மூன்று நாள் சுற்றுப்பயணமாக (10,11,12-02-2025) வந்திருந்தார்கள். அவர்களை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் அவர்களுக்கு சார்பில் மூன்று நாட்களும் சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தோம்.

பெங்களூரில் இருந்து தூத்துக்குடி இரயில் மூலமாக வந்து கீழ் திருநெல்வேலி என்று அழைக்கப்படும் தூத்துக்குடி சாயர்புரம் அருகிலுள்ள புதுக்கோட்டை கிருபா தோட்டத்தில் திரு. ஆல்வின் அவர்கள் எங்களை வரவேற்று உபசரித்தார்கள். அங்கிருந்து சுற்றுப்பயணமாக சாயர் மற்றும் கனம் ஜி. யு. போப் அவர்களால் உருவாக்கப்பட்ட சாயர்புரம் சென்றடைந்தோம். அங்கு குருவானவர் அருள்திரு. மனோகர் ஜோஸ் ஐயரவர்கள் வரவேற்று உபசரித்தார்கள். திருச்சபை வரலாற்றை போப் கல்லூரியில் பணிபுரியும் வரலாற்று ஆய்வாளர் திரு. ராஜன் அவர்கள் பகிர்ந்துகொண்டார்கள். பின்னர் கீர்த்தனை பாடகர்களை கவுரவிக்கும் திரு. விக்டர் சாமுவேல் (தூத்துக்குடி) அவர்கள் சிறப்பு பாடல் பாடி வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள்.

பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டல கதீட்ரல் தூய யோவான் பேராலயம் சென்றோம். பணி நிறைவு பெற்ற அருள்திரு. மார்காசியஸ் ஐயரவர்கள் சிறப்பாக வரவேற்று நாசரேத் சபை உருவான விதம் ஆர்தர் மார்காஷிஸ் காலரா காலத்தில் ஆற்றிய பணிகள் மற்ற மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் விவரித்தார்கள். வரலாற்றுக் சங்க உறுப்பினர் மன்னா செல்வகுமார் திருச்சபை உருவான விதம் பற்றி விவரித்து பின்னர் நினைவிடங்களையும் அவர் வசித்த இடத்தையும் பார்த்தோம். ஆர்தர் மார்காஷிஸ் கையழுத்து பிரதிகளை முதல் முறையாக பார்த்தோம்.

நாசரேத் மாநகரில் 1900 ம் வருடம் கனம் மார்காஷியஸ் ஐயரவர்கள் 8 மாணவர்களுடன் நாசரேத் இறையியல் கல்லூரியை (Nazareth Theological Seminary) ஆரம்பித்தார்கள். பின்னர் 1910ம் வருடம் கனம் C. W. வெஸ்டன் ஐயரவர்களின்







காலத்தில் கல்லூரி புதிய வடிவத்தை பெற்றது. நாசரேத் இறையியல் கல்லூரி என்ற பெயரில் இருந்து பிஷப் இறையியல் கல்லூரி (Bishop Theological Seminary) என்ற புதிய பெயரை பெற்றது. அந்த இடத்தில் தற்பொழுது பேராயர் நீல் பங்களாவும் புரனமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு அருள்திரு. H. ஜான் சாமுவேல் ஐயரவர்கள் எங்களை வரவேற்று மதிய உணவு (மீன் வகைகளுடன்) ஏற்பாடு செய்திருந்தார்கள். குருவானவர் வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள்.

பின்பு தென் நெல்லை அப்போஸ்தலர் கனம் ஜாண் தோமாஸ் அவர்கள் செய்த பணிகளையும் நினைவிடத்தையும்

புதிதாக துவங்கப்பட்டுள்ள ஜாண் தோமாஸ் மியூசியம் சென்று பார்த்தோம் மிக சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள். அங்கு எங்களை மெஞ்ஞானபுரம் திருச்சபை சார்பாகவும், திரு. குணசேகரன் ஐயா (கல்வாரி சேப்பல்) அவர்கள் சார்பாக திரு. செல்வராஜ் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக ஏற்படுத்தி இருந்தார்கள்.

இரண்டாம் நாள் காலையில் கிருபா தோடத்திலிருந்து குரும்பூர் வழியாக நாலுமாவடி இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் சென்று இடங்களை சுற்றிப்பார்த்து அங்கிருந்து. .

நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். குறிப்பாக சாயர்புரம் உருவாக காரணமாக இருந்த சாமுவேல் சாயர் அவர்கள் நினைவிடம் பார்த்தோம். பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர். சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம்.

நெல்லை அப்போஸ்தலர் கனம் ரேனியஸ் நினைவிடம் மற்றும் நுற்றாண்டு மண்டபம் இவர் கிறித்தவ சமயப் பணியுடன் தமிழ் இலக்கியப் பங்களிப்பும் செய்தவர். சாதீயப் பாகுபாடுகளைப் போக்கி சமத்துவக் குடியிருப்புகளை உருவாக்கியதுடன் பெண்கள் கல்விக்கு முன்னின்று பள்ளிகளைத் தொடங்கியவர். சமூகத்திற்கு உதவும் பல சங்கங்களைத் தோற்றுவித்த ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். 371 சபைகளையும் 151 பள்ளிகளையும் உருவாக்கியவர் இவர். அவர் உருவாக்கிய ஆலயம் திருநெல்வேலி கதீட்ரல் பரி. திரித்துவ பேராலையம் சென்றோம் அங்கு அருள்திரு. தர்மதுரை அவர்கள் எங்களோடு இணைந்து திருச்சபை வரலாற்றை பகிர்ந்துகொண்டார்கள்.

இரண்டாம் நாள் இரவு வரலாற்றுச் சிறப்புமிக்க டோனாவூர் ஐக்கியத்தில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மிஷனெரி பணி என்பது மரிப்பதற்கு சமம் என்ற "ஏமி கார்மைக்கல்: சாம்பலுக்கு அழகூட்டிய சாதாரண மங்கை" தேவதாசி என்பவர்கள் பெரும் கோயில்களில் திருப்பணிக்காகவும், சேவைக்காகவும் சிறுவயதில் நேர்ந்து விடப்பட்ட பெண்கள் அவர்களை கிறிஸ்துவை வாழ்நாளெல்லாம் நேசித்து தியாகங்கள் பல செய்து தன்னுடைய சுகதுக்கங்களுக்கு மதிப்பளிக்காமல் சேவை செய்திருக்கும் ஏமி கார்மைக்கலை நாம் எப்படி எடைபோடுவது? சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட பூப்போன்ற குழந்தைகளை அதன் கோரமான அரக்கத்தனத்தில் இருந்து காப்பாற்றி வளர்த்த சமூகசேவையை ஏமி தனியொருவராக பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்திருக்கிறார். சமூகப்பணியைக் கிறிஸ்தவரல்லாதவர்களும் செய்யலாம், செய்து வருகிறார்கள்; அது கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட சொத்துரிமையல்ல. ஆனால், ஏமியின் சமூகத் தொண்டு கிறிஸ்துவில் அவர் வைத்திருந்த அன்பினால் உருவான தன்னலமற்ற தொண்டு. தமிழ் சமூகத்தில் நிலவி வந்த அகோரத் தீங்கை, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமையை வெறுத்து, ஆபத்துக்களைச் துச்சமாக எண்ணி குழந்தைகளை அவர் காப்பாற்றிப் பாதுகாத்தார். கிறிஸ்துவின் அன்பு மட்டுமே ஒருவரை இதைச் செய்யவைக்கும் என்பதை மலர் அம்மா மூலமாக நேரடியாக கண்டு கொண்டோம். இரவு 6 மணிக்கு சிறப்பு கருத்தரங்கு ஏற்பாடு செய்யபட்டிருந்தது சிறகுகள் ஜெபக்குமார் மிக சிறப்பாக பகிர்ந்து கொண்டார்கள்.

மூன்றாம் நாள் திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் சென்றோம். அங்கு அருள்திரு. ப்ரிடி ஜான் அவர்கள் பேராயர் கால்டுவெல் நினைவிடத்தையும் எலைசா கால்டுவெல் செய்த பணிகளையும் பகர்ந்துகொண்டார்கள். தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூல் மற்றும் அவர் எழுதிய 'திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறுகள், சங்க இலக்கியங்கள், அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார் என்ற வரலாற்றை தெரிந்து கொண்டோம்.

புன்னக்காயல் கி. பி 1551-ல் மருத்துவமனை, 1586 ஆம் ஆண்டில் இங்கு முதல் தமிழ் அச்சகம் அமைக்கப்பட்டது. திருப்பணியாளர் ஜோம் டி. ஃபாரியா என்பவரால் தமிழ் அச்சுக்கள் உருவாக்கப்பட்டது. இவ்வூரில் பணியாற்றிய திருப்பணியாளர் 'அச்சுக்கலையின் தந்தை' ஹென்ரிக் ஹென்றிக்கஸ் என்பவர் தாமே தமிழ் மொழியில் தம்பிரான் வணக்கம், கிறிஸ்தியானி வாழ்வாக்கம், கன்பெசனாரியோ புத்தகங்களை எழுதியுள்ளார். 1600-ல் மரணடமடைந்த ஹென்ரிக் ஹென்றிக்கஸ் புன்னக்காயலில் 1586 இல் முதன் முதலில் புன்னைக்காயலில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது என்ற வரலாற்றை தெரிந்து கொண்டோம். (தமிழகத்தில் முதல் காகிதப் பட்டறை நிறுவப்பட்ட இடம் தரங்கம்பாடியே. தமிழ் மொழி தமிழக எல்லைக்கு அப்பால் முதலில் 1578 இல் கேரளத்திலும், 1586 இல் தமிழக எல்லைக்குள் புன்னைக்காயலிலும் முதன்முதலில் அச்சேறியது. )

பின்னர் மாலை தூத்துக்குடி நமது வரலாற்றுச் சங்க உறுப்பினர் சென்று ஆல்வின் ஜேக்கப் பழக்கடைக்கு சென்றோம் அங்கு சிறப்பான வரவேற்ப்பு அளித்தார். தூத்துக்குடியில் இருந்து இரயில் மூலமாக பெங்களூருக்கு புறப்பட்டனர். கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் உறுப்பினர் பிரின்ஸ் ராஜா மூன்று நாட்களும் அவர்களுடன் இருந்து உதவி செய்தார். சங்கத்தின் சார்பில் மன்னா செல்வக்குமார் அனைவருக்கு நன்றி தெரிவித்தார். இந்த மிஷன் வரலாற்றுச் பயணத்திற்கு அனைத்து வகையிலும் உதவி செய்த அனைவருக்கும் மற்றும் ஆல் செயிண்ட்ஸ் சர்ச் சேகர பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் சேகர பெண்கள் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இதுபோன்ற வரலாற்று சுற்றுபயணம் மேற்கொள்ள ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். அன்புடன் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் 09176780001

# நல்லூர்
## திருச்சபை வரலாறு



ஜா. ஜான் ஞானராஜ்



### காசியாபுரம் மற்றும் குருவன்கோட்டை அமைவிடம்

திருநெல்வேலியில் இருந்து மேற்கே சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் அடுத்தடுத்து காணப்படுகிற இரட்டை கிராமங்கள் காசியாபுரம் மற்றும் ஆலடிப்பட்டி. இக்கிராமங்களில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் குருவன்கோட்டை உள்ளது. இந்த கிராமங்கள் திருநெல்வேலி - தென்காசி நெடுஞ்சாலையின் மத்தியில் அமைந்துள்ள ஆலங்குளத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் காணப்படுகின்றன.

### காசியாபுரம் கிராமத்தில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்

நெல்லை அப்போஸ்தலர் கனம். ரேனியஸ் ஐயரவர்களின் நாட்குறிப்புகளின் படி 1823 ஆம் ஆண்டு முதல் ஆலங்குளம் மற்றும் அதன் சுற்று கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. 1830 இல் ஆலங்குளம் மெயின் ரோட்டில், தெரு முனை சந்திப்புகளில் ரேனியஸ் ஐயரவர்களே நற்செய்தியை அறிவித்து வந்தார். ஆலங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த சுற்று கிராமங்களிலும் கனம். ரேனியஸால் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 1830 ஆம் ஆண்டில் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் ஆலங்குளத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்த காசியாபுரம் கிராமத்தார் நற்செய்தியை ஏற்றனர்.

### காசியாபுரம் மற்றும் குருவன்கோட்டை கிராமங்கள் ஓர் அறிமுகம்

அக்காலத்தில் தேரிக்காடு என்றும் கீழ்காடு என்றும் அழைக்கப்பட்ட தற்போதைய திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் தாலுகாக்களில் இருந்து சுமார் 300 முதல் 350 ஆண்டுகளுக்கு முன்பு நாடார் சமூகத்தினர் காசியாபுரம், ஆலடிப்பட்டி மற்றும் குருவன்கோட்டை ஆகிய கிராமங்களில் குடியேறி தத்தம் குலதெய்வ கோயில்களை நிறுவி அவற்றில் வழிபாடு செய்து வசித்து வந்தனர்.

### காசியாபுரத்தில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி

1830 இல் காசியாபுரத்தில் மூன்று குடும்பத்தினர் முதலில் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களைத் தொடர்ந்து மேலும் நான்கு குடும்பத்தினர் கிறிஸ்தவராக மாற காசியாபுரம் கிராம கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஏழு குடும்பமாக உயர்ந்தது.

### காசியாபுரம் சபைக்கு ஏற்பட்ட துன்பம்

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருக தொடங்கிய அதே வேளையில் துன்பமும் உபத்திரமும் பெருக தொடங்கியது. காசியாபுரத்தில் கிறிஸ்தவர்களாக மாறின ஏழு குடும்பங்களின் தலைவர்கள் மீது பகைவர்கள் பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கின் காரணமாக ஏழு குடும்பங்களின் தலைவர்கள் அம்பாசமுத்திரம் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

பகைவர்கள் கொடுத்த பொய் குற்றச்சாட்டு காரணமாக சிறை தண்டனையை ஏழு குடும்பங்களின் தலைவர்கள்

பெற்றனர். சிறையில் கடுமையான தொந்தரவுகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது சிறையில் பல அவதிகளை அவர்கள் அனுபவித்தனர். ரேனியஸ் தமது நாட்குறிப்பேட்டில். 14.04.1832 அன்று காசியாபுரம் வழக்கு குறித்தும் காசியாபுரத்தின் ஏழு குடும்பத் தலைவர்கள் அம்பாசமுத்திரம் சிறையில் துன்பங்கள் அனுபவிப்பது குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

### தாசில்தார் முன்னிலையில் கிறிஸ்தவர்களுக்கு கொடுமை

அம்பாசமுத்திரம் சிறைச்சாலையில் ஏழு குடும்பத் தலைவர்களும் அம்பாசமுத்திரம் தாசில்தாரின் முன்னிலையில் கொடுமைப்படுத்தப்பட்டனர். காவலர்கள் அந்த கிறிஸ்தவர்களது நெற்றிகளில் விபூதிகளை கட்டாயப்படுத்தி பூசினார்கள். இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கும் படி ஏழு பேருக்கும் கட்டளை கொடுத்தனர். ஏழு பேரும் மறுலிக்க மாட்டோம் என்பதில் உறுதியாய் இருந்தார்கள்.

### கிறிஸ்தவர்களின் முகத்தில் தீச்சூடு வைத்தல்

எரிந்து கொண்டிருந்த திரிகளை ஏழு பேரின் முகங்களில் தடவி சுட வைத்தார்கள் முகங்களில் தீக்காயங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் ஏழு குடும்பத் தலைவர்களும் மறுதலியாமல் கிறிஸ்தவத்தில் உறுதியாக நின்றார்கள் எல்லாவற்றையும் பொறுமையோடு சகிப்பதைப் பார்த்த தாசில்தார் அவர்களை குட்டையில் மாட்டி விளார் அடி கொடுக்க கட்டளையிட்டார். விளார் அடி கொடுக்கப்பட்ட போதும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை அதைக் கண்ட தாசில்தார் அவர்களை விடுதலை செய்து விரட்டி அனுப்பினார்.

### குருவன்கோட்டை கிராமத்தார் மீது பிற வகுப்பார் கொண்ட கோபம்

குருவன்கோட்டை கிராமத்தார் கிறிஸ்தவர்களான பின் ஆதிக்க வகுப்பாரின் ஒடுக்குதல்களைக் கண்டு அஞ்சி ஒடுங்கிப் போகாமல் எதிர்க்க ஆரம்பித்தார்கள். தைரியம் மிக்க யாக்கோபு உபதேசியார் சபை மக்களுக்கு அரணாக இருந்தார். குருவன்கோட்டை மக்களிடம் கிறிஸ்தவரான பின்பு காணப்பட்ட இந்த மாற்றம் பிராமணர்களுக்கும் பிற வகுப்பினருக்கும் ஏற்றுக் கொள்ள இயலாததாக இருந்தது.

### குருவன்கோட்டை வழக்கு

ஒரு நாள் குருவன்கோட்டை சபை ஊழியர் யாக்கோபு உபதேசியாரும் சபை மக்களில் சிலரும் ஆற்றுக்கு சென்று மீன்பிடித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தனர் வரும் வழியில் அவர்கள் பிற வகுப்பாரின் ஊர் வழியாய் திரும்ப வேண்டி இருந்தது. மீன்களைப் பிடித்தவாறு குருவன்கோட்டை நோக்கி திரும்பிய போது தங்கள் ஊர் வழியாகச் சென்ற அவர்களை பகைவர் தாக்கி அடித்தனர். உபதேசியாருக்கு தலையிலும் முதுகிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. குருவன்கோட்டை ஊர் சபை தலைவருக்கு தலையிலும் முதுகிலும் உடலின் வேறு பல பாகங்களிலும் பயங்கரமான காயங்கள் இருந்தது. அவருடைய கைகளில் ஒன்று முறிந்து போயிற்று. மேலும் இவர்களோடு சென்ற ஆறு பேர் அடிக்கப்பட்டனர். மற்ற கிறிஸ்தவர்கள் தப்பிச் சென்றார்கள். இந்த செய்தியை அறிந்த குருவன்கோட்டை ஊரார் கட்டில்களை கொண்டு வந்து தங்கள் ஊர் உபதேசியாரையும் ஊர் சபை தலைவரையும் கட்டில்களில் சுமந்து குருவன்கோட்டை ஊருக்கு வந்து சேர்ந்தார்கள் இரண்டு நாட்கள் கழித்து அவ்வாறே இருவரையும் சுமந்து கொண்டு ரேனியஸ் ஐயரவர்களிடம் 02.10.1831 அன்று கொண்டு சென்றார்கள் தங்களுடைய காயங்களை எல்லாம் காட்டி முறையிட்டு அழுதார்கள். ரேனியஸ் ஐயரவர்களும் இவர்களது நிலையை கண்டு ஆறுதல் கூறி ஜெபித்தார். அவரால் வேறு ஒன்றும் அக்காலத்தில் செய்ய இயலவில்லை பாளையங்கோட்டைக்கு சென்று திரும்புவதற்குள் பகைவர் தமது செல்வாக்கை பயன்படுத்தி தங்களால் அடிக்கப்பட்ட குருவன்கோட்டையைச் சார்ந்த எட்டு பேரும் தங்கள் ஊருக்குள் வந்து கலகம் பண்ணினதாக பொய்வழக்கு தொடர்ந்தார்கள். இந்த பொய் வழக்கின் காரணமாக மீன்பிடிக்க சென்ற அனைவரும் கைதாகி சிறையில் வைக்கப்பட்டார்கள் வழக்கு இரண்டு மாதங்கள் நடைபெற்றது.

1831 நவம்பர் 21 ஆம் நாள் இறுதி விசாரணை நடைபெற்றது. அன்றைய தினத்தில் தீர்ப்பு வெளியாகும் சூழ்நிலை இருந்தது. இதற்காக ரேனியஸ் ஐயரவர்கள் அன்றைய தினம் பகல் முழுவதும் கவலையோடு முழங்காலில் நின்று ஜெபத்தோடு காத்திருந்தார்கள். உணவு சாப்பிடவில்லை பிற்பகலில் ஒரு உபதேசியார் ஓடோடி வந்து நீதிபதி அந்த வழக்கை பொய் வழக்கு என கண்டுபிடித்து வழக்கை தள்ளுபடி செய்து விட்டார் என்ற நல்ல செய்தியை ரேனியஸ் ஐயரவர்களிடம் சொன்னார். ரேனியஸ் ஐயரவர்களின் முகம் மகிழ்ச்சி அடைந்தது சற்று நேரத்தில் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட யாக்கோபு உபதேசியாரும் சபையாரும் ரேனியஸ் ஐயரவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். 1831 நவம்பர் 23 ஆம் தேதி அன்று ரேனியஸ் ஐயரவர்கள் இது குறித்து தமது நாட்குறிப்பில் 'ஏரோதின் கையில் இருந்து பேதுரு விடுதலை அடைவதற்காக ஜெபத்தில் தரித்திருந்த எருசலேம் சபையாரின் உணர்ச்சிகளைப் போன்று எங்களுடைய உணர்ச்சிகளும் இருந்தன நாங்கள் ஜெபித்தோம்' என்று மகிழ்ச்சியோடு அந்த காரியத்தை வர்ணித்து குறிப்பு எழுதினார். அன்றைய தினம் அனைவரும் பாளையங்கோட்டை தேவாலயத்துக்கு சென்று ஸ்தோத்திர ஆராதனை நடத்தினார்கள்.

### நல்லூர் மிஷன் கிராமம் உருவாக்கப்படுதல்

காசியாபுரம் மற்றும் குருவன்கோட்டை ஆகிய கிராமங்களில் பகைவர்களால் உண்டான உபத்திரங்களால் கிறிஸ்தவர்கள் வீடு வாசல் இழந்து நிற்கும் அவல நிலை ஏற்பட்டது. ஆதலால் மனம் வருந்திய ரேனியஸ் ஐயரவர்கள் காசியாபுரத்துக்கு அருகில் பெரிதானதோர் நிலம் வாங்கி கிறிஸ்தவ கிராமம் அமைக்க திட்டமிட்டார். 1832 அக்டோபர் நவம்பரில் காசியாபுரத்தையொட்டி பெரிதானதோர் நிலம் மிஷன் கிராமம் அமைப்பதற்காக வாங்கப்பட்டது.

அந்த நிலம் 120 ஏக்கர் என ரேனியஸ் ஐயரவர்களால் நல்லூர் சபைக்கு சபை ஊழியராக நியமிக்கப்பட்ட விசுவாசம் உபதேசியாரின் கொள்ளு பேரன் அவர்கள் நல்லூர் தூய பவுல்

ஆலய 150 ஆவது ஆண்டு விழா மலரில் குறிப்பிடுகிறார்கள். திருநெல்வேலி திருமண்டல வரலாற்று ஆய்வாளர் திரு ஆர் எஸ் ஜேக்கப் அவர்கள் நல்லூர் மிஷன் கிராம உருவாக்கத்திற்காக வாங்கப்பட்ட அந்த பெரிதான நிலம் 60 ஏக்கர் என குறிப்பிடுகிறார்கள்.

### நல்லூரில் மக்கள் குடியேற்றம்

1832 அக்டோபர் மற்றும் நவம்பரில் உருவாக்கப்பட்ட புதிய மிஷன் கிராமத்தில் இரண்டு குடும்பத்தினர் குடியிருப்பதற்கு முன் வந்தனர். இரண்டு வீடுகள் மட்டுமே கட்டப்பட்டது. ரேனியஸ் ஐயரவர்களுக்கு அது ஏமாற்றமாக இருந்தது எனினும் தேவாலயமாகவும், பள்ளிக்கூடமாகவும் இரு விதங்களில் பயன்படுத்தக் கூடிய அளவில் பெரியதான கட்டிடத்தை ரேனியஸ் ஐயரவர்கள் கட்டினார்கள் அதில் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. ஞாயிறு ஆராதனையும் அங்கு நடத்தப்பட்டது. உடனடியாக மேலும் 5 குடும்பத்தினர் அந்த புதிய மிஷன் கிராமத்தில் குடியேறினார்கள். அந்த புதிய மிஷன் கிராமத்திற்கு நவம்பர் 1832 ஆம் ஆண்டு நல்லூர் என்ற புதிய பெயரை ரேனியஸ் ஐயரவர்கள் சூட்டினார்கள். ஓராண்டு காலம் வரை ஏழு குடும்பத்தினரே அந்த கிராமத்தில் இருந்தார்கள். தொடக்ககால இந்த குடும்பத்தினர் காசியாபுரம் மற்றும் குருவன்கோட்டையிலிருந்து நல்லூரில் குடியேறியவர்கள் ஆவர். தொடக்க கால இந்த ஏழு குடும்பத்தினரின் வழி மரபினர் நல்லூரில் வசித்து வருகின்றனர்.

இந்த ஏழு குடும்பத்தினருக்காக அங்கு சபை ஊழியம் செய்யும் படி கடாட்சபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் மூத்த மகனாகிய வாலிபராகிய ஜி. விசுவாசம் என்பவரை ரேனியஸ் நியமித்தார். விசுவாசம் உபதேசியார் 1809 இல் பிறந்தார் 19.12.1884 இல் மரணம் அடைந்தார். அவர் நல்லூரில் உபதேசியாராக இருந்த போது நல்லூர் திரு. சாமுவேல் உபாத்தியாயரின் தங்கை அன்னம்மாளைத் திருமணம் செய்தார். அன்னம்மாள் 1818 இல் பிறந்தார் 17.12.1884 இல் மரணம் அடைந்தார். அருணோதயா பெண்கள் நடுநிலைப் பள்ளியில் திரு. G. விசுவாசம் 1841 முதல் 1855 வரை தலைமை ஆசிரியராகப் பணி செய்தார் இந்த காலத்தில் நல்லூர் தூய பவுல் தேவாலய சபை ஊழியராகவும் இவர் பணி செய்தார். விசுவாசம் உபதேசியார் - அன்னம்மாள் தம்பதியருக்கு ரேச்சல் ரெபேக்கா, மேரி (1841-1921), லீதியாள் (லிடியா) (1848-1920) என மூன்று பெண் குழந்தைகள். மூவரில் இரண்டாவது பெண் குழந்தையான மேரியை சாமுவேல் உபாத்தியாயரின் 13 பிள்ளைகளில் ஆறாவது மகனான ஜோசப் சாமுவேல் திருமணம் செய்தார்.

விசுவாசம் உபதேசியார் சபை ஊழியராக இருந்த காலத்தில் நல்லூரில் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டது. அந்நேரம் இவர் அதிக ஜெபத்துடன் தோண்டிய கிணற்றில் நல்ல குடிதண்ணீர் சிறப்பாக கிடைத்துள்ளது. ஆதலால் மிஷனரி P. P. சாப்டர் ஐயரவர்கள் அந்த கிணற்றுக்கு விசுவாசம் ஊற்று என பெயரிட்டு அதற்கான கல்வெட்டையும் கிணற்றில் வைத்துள்ளார். அந்த கிணறும் கல்வெட்டும் இன்றளவும் உள்ளது.

### ரேனியஸ் ஐயரவர்கள் வீடு

ரேனியஸ் ஐயரவர்கள் தாம் தங்குவதற்கு என கிணற்றுடன் கூடிய சிறப்பான வீடு ஒன்றையும் நல்லூரிலிருந்து குருவன்கோட்டைக்கு செல்லும் சாலையின் சந்திப்பு அருகில் கீழ்புறம் கட்டி இருந்தார்கள். அந்த வீட்டை தாம் CMS மிஷனரி சங்கத்திலிருந்து விலக்கப்பட்டபோது தம்மால் நல்லூருக்கு அழைத்துவரப்பட்ட G. விசுவாசம் உபதேசியாருக்கு கிரயத்திற்கு கொடுத்தார்கள்.

### நல்லூர் சபை நிலை

CMS மிஷனில் இருந்து கனம். ரேனியஸ் ஐயரவர்கள் 1835 ஜூனில் விலக்கப்பட்ட நிலையில் 16.07.1835 அன்று குருமார்கள் பெற்றிட், சார்ஜென்ட், ஜான் தேவசகாயம் ஆகிய மூவரின் சபை சந்திப்பு மிஷன் சுற்றுப்பயணத்தில் முதலாவது அவர்கள் சந்தித்த சபை நல்லூர் ஆகும். அங்கு கனம். சார்ஜென்ட் ஆராதனை நடத்த கனம். பெற்றிட் அருளுரையாற்றினார். 35 பேர் ஆராதனையில் பங்கு பெற்றார்கள்.

### நல்லூரைத் தலைமை இடமாகக் கொண்டு புதிய சர்க்கிள்

1838 இல் திருநெல்வேலி சி. எம். எஸ். மிஷனின் மேற்கு பாகத்தின் வடபகுதி சபைகளை ஒருங்கிணைத்து நல்லூரைத் தலைமை இடமாகக் கொண்ட நல்லூர் சர்க்கிள் (வட்டம்) உருவாக்கப்பட்டது. இந்த வட்டம் வடக்கு சர்க்கிள் என்றழைக்கப்பட்டது. இந்த நல்லூர் சர்க்கிள் உருவாக்கமே பிற்காலத்தில் மேற்கு திருநெல்வேலியிலுள்ள அனைத்து CMS மிஷன் சபைகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட மேற்கு கவுன்சிலின் தலைமை இடமாக நல்லூர் செயல்பட காரணமாக அமைந்தது.

### ஐரோப்பிய மிஷனரிமார்களின் கண்காணிப்பு

கனம். ஜான்தாமஸ் ஐயரவர்கள் 1835 இல் CMS மிஷனரி சங்கம் சார்பாக மிஷனரியாக பாளையங்கோட்டை வந்தடைந்தார்கள். சபை சந்திப்பு சுற்றுப்பயணத்தில் பெற்றிட், ஜான் தேவசகாயம் ஆகியோரோடு இணைந்து பலமுறை நல்லூர் வந்துள்ளார்கள். 1838 -1840 வரையிலான காலகட்டத்தில் நல்லூரில் மிஷனரியாகப் பணி செய்துள்ளார்கள். 1840 - 1841 கனம். P. P. ஷாப்டர் ஐயரவர்கள் நல்லூர் வட்டார மிஷனரியாக பொறுப்பேற்று வட்டார சபைகளை கண்காணித்ததோடு புதிய சபைகளையும் உருவாக்கினார்கள். 1842 - 1843 வரை நல்லூர் வட்டார மிஷனரி ஆக கனம். ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயரவர்கள் பணிசெய்தார்கள். 1844 முதல் 1854 வரை பத்தாண்டுகள் கனம். P. P. ஷாப்டர் ஐயரவர்கள் நல்லூர் வட்டார மிஷனரி ஆக நல்லூர் வட்டார சபைகளை கண்காணித்து வந்தார்கள். புதிய சபைகளை உருவாக்கினார்கள். இவர்களது பணிக்காலத்தில் சபை ஊழியராக இருந்தவர் ரேனியஸ் ஐயரவர்களால் அழைத்து வரப்பட்ட ஜி. விசுவாசம் உபதேசியார் ஆவார்.

### நல்லூரில் சுதேச குருவானவர் நியமனம்

P. P. ஷாப்டருக்குப் பின் 1873 வரை கனம். வில்லியம் கிளார்க், கனம். டிக்சன், கனம். ஜென்னிங்ஸ் ஆகிய ஐரோப்பிய

மிஷனரிமார் நல்லூர் வட்டார மிஷனரிகளாகப் பணியாற்றினர். 1857 இல் நல்லூருக்கு சுதேச குருவானவரும் முதல் பிராட்டஸ்டண்ட் குருவானவருமான கனம். தே. ஞானமுத்து ஐயரவர்கள் குருவானவராக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் ஆங்கிலம், கிரேக்கு, லத்தீன், எபிரேயு, தமிழ் என பல மொழிகளில் அதிக மொழி அறிவு கொண்டவர்கள்.

### நல்லூர் சந்தை குறித்த குறிப்புகள்

நல்லூர் மிஷனரிகளால் உருவாக்கப்பட்ட நல்லூர் சந்தை குறித்த குறிப்புகளை பேராயர் சார்ஜென்ட் அவர்கள் நல்லூரில் கவுன்சில் கூட்டத்தில் குறிப்புகளாகக் கொடுத்துள்ளார்கள். அதில் நல்லூர் சந்தை எந்த துன்பம் வந்தாலும் எடுத்து விடப்படாது சந்தையில் தங்கள் பொருட்களை இழந்தவர்கள், திருட்டு கொடுத்தவர்கள் தாம் இழந்த பொருட்களின் முழு மதிப்பு அல்லது அதில் ஒரு பகுதியாவது சந்தையின் கட்டண நிதியில் இருந்து கொடுக்கப்படும். சந்தை கட்டண நிதி நல்லூர் கவுன்சில் நிர்வாகத்தில் நடக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

### 1877 இல் நல்லூர் சேகர நிலை

1877 இல் நல்லூர் சேகரத்துக்கு என தனி குருவானவர் இல்லை நல்லூர் சேகரத்தில் ஏழு சபைகள் உள்ளன அவற்றின் மூலம் மொத்த சபையார் 648. விரைவில் ஒரு குருவானவர் நியமிக்கப்பட வேண்டும் என பேராயர் சார்ஜென்ட் 1877 இல் நல்லூர் சேகர நிலை பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

### 1888 ஆம் ஆண்டில் பேராயர் தலைமையில் நல்லூர் கவுன்சில்

1888 ஆம் ஆண்டில் நல்லூர் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. அதன் கூட்ட நடபடிகளின் படி 'நல்லூர் கவுன்சிலில் உதவித்தொகை மிக குறைவாக உள்ளது, நல்லூர் கவுன்சிலில் அநேக புதிய கிறிஸ்தவர்கள் உருவாகியிருக்கிறார்கள்.'

### நல்லூரின் முதல் தேவாலயம்

1835 இல் நல்லூர் வடக்கு தெருவில் பனை ஓலையை மேற்கூறையாகக் கொண்ட தேவாலயம் அமைக்கப்பட்டு அங்கு ஆராதனை நடத்தப்பட்டது.

### நல்லூரில் இரண்டாம் தேவாலயம்

தற்போது தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் அது கட்டப்பட்டது. தேவாலயத்தை கட்டிய மிஷனரி கனம். பால் பசிபிக் சாப்டர் (Rev. P. P. Shafter) அந்நேரம் நல்லூர் சபை ஊழியராக இருந்தவர் திரு ஜி விசுவாசம் உபதேசியார் அவர்கள். 14.09.1849 அன்று நல்லூர் தேவாலயம் தூய பவுல் தேவாலயம் என்ற பெயரில் கனம். செப்டிமஸ் ஹாப்ஸ் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கனம். ஸ்டீவன் ஹாப்ஸ் ஐயரவர்கள் தேவாலய பிரதிஷ்டை ஆராதனையில் அருளுரையாற்றினார்கள். பிரதிஷ்டை நடைபெற்ற அந்நாளில் நல்லூர் திருச்சபை மக்கள் தொகை 59 வீட்டார்.

### தூய. பவுல் தேவாலயத்திற்கு பளிங்கு கற்களால் தரைத்தளம்

1940 இல் கனம். ஜே ஏ சாமுவேல் ஐயரவர்கள் காலத்தில் தூய பவுல் தேவாலய தரைத்தளம் கருப்பு வெள்ளை பளிங்கு கற்களாக மாற்றப்பட்டது.

### தேவாலயத்தில் வெஸ்றி அறைகள்

1940 ஆம ஆண்டு தேவாலயத்தின் வடபுறம் தென்புறம் உள்ள வெஸ்றி அறைகள் கட்டப்பட்டன.

### தூய பவுல் தேவாலய நூற்றாண்டு விழா (1850-1950)

நல்லூர் தூய. பவுல் தேவாலய நூற்றாண்டு விழா (1850-1950) 30.07.1952 இல் நெல்லை பேராயர் மகா கனம். ஜி. டி. செல்வின் அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந்நேரம் குருவானவர் கனம். ஜே. ஏசுதாசன் ஐயரவர்கள் அந்நேரம் சபை ஊழியர் திரு ஆர். தேவதாசன்.

### தூய பவுல் தேவாலயத்திற்கு மின் இணைப்பு

கனம். ஒய் ஜி. தேவதாசன் ஐயரவர்கள் காலத்தில் 1956 இல் நல்லூர் தூய. பவுல் தேவாலயத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டது அந்நேரம் சபை ஊழியர் திரு ஜி. எஸ். அம்புரோஸ் அவர்கள் மற்றும் திரு. பீட்டர் மாசிலாமணி அவர்கள்.

### தூய. பவுல் தேவாலயத்திற்கு ஒலிபெருக்கி

1962 இல் கனம். S. சாலமோன் சைமன் ஐயரவர்கள் காலத்தில் தூய. பவுல் தேவாலயத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டது.

### தேவாலயத்தின் மேற்கூரையில் நாழி ஓடுகள் மாற்றம்

1984 இல் தேவாலயத்தின் மேற்கூறையாக இருந்த நாழிஓடுகள் அகற்றப்பட்டு அவை சாதாரண ரயில்வே ஓடுகளாக மாற்றப்பட்டது. அக்காலத்தில் குருவானவர் கனம். கிருபைமணி ஐயரவர்கள் அக்காலத்தில் நற்கருணை கிராதியும் அமைக்கப்பட்டது. அந்நேரம் சபை ஊழியராக இருந்தவர் எஸ். டி. செல்லத்துரை அவர்கள்.

### தேவாலயத்திற்கு புதிய நாக்கு மணி

1984 ஆம் ஆண்டு நல்லூர் சபையைச் சார்ந்த திரு. V. D. ஞானம் அவர்களின் குடும்பத்தார் சார்பாக தூய. பவுல் தேவாலயத்திற்கு புதிய பெரிதான நாக்கு மணி அமைக்கப்பட்டது. பழைய நாக்குமணி ஆலங்குளம் இரட்சணியபுரம் தேவாலயத்திற்கு கொடுக்கப்பட்டது.

### தேவாலய ஜன்னல்களுக்கு கிரில்

1987 இல் கனம். இரத்தினம் ஐயரவர்கள் காலத்தில் தேவாலயத்தில் உள்ள ஜன்னல்களுக்கு கிரில் அமைக்கப்பட்டது.

### தேவாலய விரிவாக்கமும் புதிய கோபுரமும்

20.06.1992 அன்று கனம். காந்தி செல்வின் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன். S. தர்மராஜ் அவர்களால் விரிவாக்கப்பட்ட தூய. பவுல் தேவாலயம், தேவாலய முன் மண்டபம் மற்றும் புதிய கோபுரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தேவாலய உபயோகத்திற்கு ஜெனரேட்டர்

1994 இல் கனம். பி தேவதாசன் ஐயரவர்கள் காலத்தில் தேவாலய உபயோகத்திற்கு 5 K. V. ஜெனரேட்டர் வாங்கப்பட்டது. அந்த ஜெனரேட்டரின் திறன் போதுமானதாக இல்லாததால் 1999 இல் கனம். அறிவர். D. ஜாண் டேவிட் ஐயரவர்கள் காலத்தில் 7. 5 K. V ஜெனரேட்டர் தேவாலய உபயோகித்திற்கு வாங்கப்பட்டது.

### நல்லூர் தூய பவுல் தேவாலய 150 வது ஆண்டு விழா

நல்லூர் தூய பவுல் தேவாலய 150 வது ஆண்டு விழா மேற்கு கவுன்சில் மற்றும் நல்லூர் சேகர தலைவராக இருந்த அறிவர். கனம். D. ஜாண் டேவிட் ஐயரவர்கள் தலைமையில் சபை ஊழியர் திரு S. டேனியல் மோகன்தாஸ் அவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்கள் தலைமை தாங்க 25.01.2000 இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### 150வது ஆண்டு விழா மலர்

150 ஆவது ஆண்டு விழாவையொட்டி 150 ஆவது ஆண்டு பிரதிஷ்டை விழா மலர் சிறப்பான வரலாற்று குறிப்புகளுடன் மிகச் சிறப்பான முறையில் வெளியிடப்பட்டது மலர்குழு பொறுப்பாளராக மேற்கு கவுன்சில் மற்றும் நல்லூர் சேகர தலைவராக இருந்த அறிவர். கனம். D. ஜாண் டேவிட் ஐயரவர்கள் செயல்பட்டார்கள்.

### கனம் ரேனியஸ் சபா மண்டபம்

நல்லூர் தூய பவுல் தேவாலய வளாகத்தில் தென் புறத்தில் கனம். ரேனியஸ் சபா மண்டபம் கட்ட சேகர தலைவர் கனம். G. வேதநாயகம் ஐயரவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. சிறப்பாக கட்டப்பட்ட கனம். ரேனியஸ் சபா மண்டபம் சபை ஊழியர் திரு டேனியல் மோகன் தாஸ், சேகர தலைவர் கனம். வேதநாயகம் ஐயரவர்கள் ஆகியோரின் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்களால் 07.05.2007 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. கனம். ரேனியஸ் சபா மண்டபம் உணவு அருந்தும் அறை 04.10.2010 அன்று பணி நிறைவு பெற்ற மதுரை ராமநாதபுரம் பேராயர் மகாகனம். தவராஜ் டேவிட் ஏம்ஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### நல்லூர் தேவாலய விரிவாக்க பணி

நல்லூர் தேவாலய விரிவாக்க பணிக்கு நல்லூர் சேகர தலைவர் கனம். B. E. வில்சன் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை திருமண்டல துணைத் தலைவர் கனம். A. H. L. பில்லி ஐயரவர்களால் 25. 01. 2018 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆல்டரின் பின்புறம் விரிவாக்கம் செய்யப்பட்ட நல்லூர் தூய. பவுல் தேவாலயம் 28.07.2024 அன்று ஸ்தோத்திரப் பண்டிகையின் போது சேகர தலைவர் கனம். பிரே. எஸ். ஜேம்ஸ் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை திருமண்டல பேராயர் மகாகனம். ARGST. பர்னபாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### நல்லூரும் கல்வி நிலையங்களும்

சி. எம் எஸ் அருணோதயா நடுநிலைப்பள்ளி, 1841 இல் பெண்களுக்கான உண்டு உறைவிட பள்ளி நல்லூர் வட்டார மிஷனரிகளால் நல்லூரில் தொடங்கப்பட்டது. அந்த பள்ளி 1943 இல் நடுநிலைப்பள்ளியானது. 1841 இல் பள்ளியின் முதல் தலைமை ஆசிரியராக அக்காலத்தில் நல்லூர் சபை ஊழியராக இருந்த ஜி. விசுவாசம் உபதேசியார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் 1855 வரை இப்பள்ளியை சிறப்பாக நடத்திச் சென்றார்கள். 1841 இல் பெண்களுக்கான விடுதியுடன் கூடிய உயர்தரப்பள்ளியாக தொடங்கப்பட்ட இப்பள்ளியை 1875 வரை நல்லூர் வட்டார மிஷனரிமார்களே நிர்வகித்து வந்தார்கள். 1875 முதல் பாளையங்கோட்டை எஸ். டி. சி பள்ளிகளின் நிர்வாகத்தார். இந்த பள்ளி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். 1938 முதல் இப்பள்ளி சி. எம். எஸ் அருணோதயா நடுநிலைப்பள்ளி என இந்திய அரசு முறைப்படி சென்னை மாகாணம் மதுரை டிவிஷன் கல்வி அதிகாரிகளால் முறையான அங்கீகாரம் பெற்று நடத்தப்படலாயிற்று.

### மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப்பள்ளி (West Tirunelveli Higher Secondary School)

1842 இல் ஆண்களுக்கான தொடக்கப்பள்ளி நல்லூரில் தொடங்கப்பட்டது. இப்பள்ளியை கனம். ஆசீர்வாதம் ஐயரவர்கள் 1924 இல் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தினார்கள். இப்பள்ளி 1943 இல் உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்தது. 1978 இல் மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்தது. மேற்கு சபை மன்ற தலைமையிடத்தில் உள்ள பள்ளி என்பதால் மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப்பள்ளி (West Tirunelveli Higher Secondary School) என அழைக்கப்படுகிறது. இப்பள்ளியில் சுமார் 2500 மாணவ மாணவியர் கல்வி பயின்றனர். 1991 முதல் ஆங்கில வழிக் கல்வி இப்பள்ளியில் தொடங்கப்பட்டது. 1998ல் இப்பள்ளியில் சிற்றாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை ஆனது இப்பள்ளி 15 ஏக்கர் 90 சென்ட் நிலப் பரப்பில் காணப்படுகிறது.

### TDTA தொடக்கப்பள்ளி

1841 இல் தொடங்கப்பட்ட தொடக்கப்பள்ளி பின்னர் நடுநிலைப்பள்ளயானது. 1943 இல் நடுநிலைப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுகிற போது அங்கு ஏற்கனவே நடைபெற்று வந்த தொடக்கப் பள்ளியானது தொடர்ந்து TDTA தொடக்கப்பள்ளி என செயல்படத் தொடங்கியது.

### நல்லூர் சி. எஸ். ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி

மதுரை திரு. S. ஜெயராஜ் செல்லத்துரை அவர்களது நன்கொடை மற்றும் நல்லூர் மண்ணின் மைந்தரும் மும்பையில் பிரதம பொறியாளராக பணி செய்து பணி நிறைவு பெற்றவருமான திரு வி. ஜி. இராஜா சிமியோன் அவர்களது நன்கொடை நல்லூர் ஆலடிப்பட்டியின் மண்ணின் மைந்தர் அப்போதைய சட்டத்துறை அமைச்சருமான ஆலடி அருணா அவர்கள் நல்லூர் சேகர தலைவர் மற்றும் மேற்கு சபை மன்ற தலைவர் அறிவர். கனம். D. ஜான் டேவிட் ஐயரவர்கள் ஆகியோரின் பெரும் முயற்சியினால் அப்போதைய நெல்லை பேராயர் ஜேசன் எஸ் தர்மராஜ் அவர்களது ஆதரவாலும் ஆண் பெண் என இரு பாலர் சேர்ந்து பயிலும் கலை அறிவியல் கல்லூரியாக 23.07.1997 இல் பெற்ற தமிழ்நாடு அரசின் அனுமதியுடன், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரத்துடன்

நல்லூர் சி.எஸ்.ஐ ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி 27.08.1997 அன்று தொடங்கப்பட்டது.

1997-1998 கல்வி ஆண்டுக்கான மாணவ மாணவியர் சேர்க்கைக்கான அனுமதியுடன் பி.ஏ., பி.காம்., பி.எஸ்.சி (கணிதம்) ஆகிய மூன்று பாடங்களுடன் தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் ஐந்து ஆசிரியர்கள் 23 மாணவர் சேர்ந்தனர். நல்லூர் குருமனையை ஒட்டி இருந்த பழைய பங்களாவில் கல்லூரி செயல்பட தொடங்கியது கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளராக மேற்கு சபை மன்ற கவுன்சில் சேர்மன் கனம். D. ஜான் டேவிட் ஐயரவர்களும், கல்லூரியின் முதல்வராக டாக்டர். ஐயாத்துரை அவர்களும் பொறுப்பேற்றார்கள் கல்லூரிக்கான புதிய கட்டிடங்கள் கட்டும் பணியில் கல்லூரி நலக்குழு சிறப்பாக செயல்பட்டது. 29. 01. 1999 அன்று வி. ஜி. ஆர். சிமியோன் அவர்களது தந்தை தாய் நினைவாக கட்டப்பட்ட V. D. ஞானம் Block கட்டிடம் பேராயர் மகா கனம். ஜேசன் S. தர்மராஜ் அவர்களால் ஜெபித்து ஆசிர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. திரு. ஆலடி அருணா குடும்பத்தாரால் கல்லூரி நிர்வாக அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. 1999-2000 இல் கல்லூரி கட்டிடத்தில் முதல் மாடி கட்டப்பட்டது.

### நல்லூர் தூய பவுல் ஆலய பாடகர் குழு

மேற்கு சபை மன்ற பாடகர் குழுக்களில் நல்லூர் சபை பாடகர் குழு மிகப் பழமையானது. 03.05.1951 அன்று கனம். ஜெ. ஏசுதாஸ் ஐயரவர்கள் காலத்தில் பாடகர் குழு தொடங்கப்பட்டது பட்டணத்தையா திரு. Y. தேவநேசன் அவர்கள் மூலம் ஆர்கன் வாங்கப்பட்டது. 25.01.1970 இல் பாடகர் குழுவினருக்கு என தனி அறை கனம். சவரிதாஸ் ஐயரவர்கள் காலத்தில் கட்டப்பட்டது. கனம். P. தேவதாசன் ஐயரவர்கள் காலத்தில் எலக்ட்ரானிக் ஆர்கன் வாங்கப்பட்டது. 1999 ஈஸ்டர் முதல் அங்கி அறை கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1951 முதல் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக திரு இம்மானுவேல் செல்லத்துரை அவர்கள் பாடகர் குழு தலைவராக இருந்தார்கள். அவர்களுக்கு பின் சுமார் 20 ஆண்டுகள் டாக்டர். J. கிறிஸ்டோபர் அவர்கள் பாடகர் குழு தலைவராகப் பணியாற்றினார்கள்.

### நல்லூர் தவச உற்சவம் - ஸ்தோத்திரப் பண்டிகை

தவச உற்சவம் - ஸ்தோத்திரப் பண்டிகை முதன்முதலாக அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்திலும் திருநெல்வேலி திருமண்டலத்திலும் இருந்த சிவகாசி சாட்சியாபுரத்தில் 1891 இல் CMS தலைமை கண்காணிப்பு மிஷனரி கனம். தாமஸ் உவாக்கர் ஐயரவர்கள் மற்றும் சிவகாசி சர்க்கிள் சேர்மன் கனம். தா. சாமுவேல் பவுல் ஐயரவர்கள் ஆகியோரின் முயற்சியால் தொடங்கப்பட்டது. திருநெல்வேலி திருமண்டலத்தில் இரண்டாவதாக நல்லூரில் சர்க்கிள் சேர்மன் கனம். ஜேம்ஸ் ஆசீர்வாதம் ஐயரவர்கள் காலத்தில் 1892 இல் தவச உற்சவம் - ஸ்தோத்திரப் பண்டிகை மூன்று நாட்கள் பண்டிகையாக தொடங்கப்பட்டது. இரண்டாம் நாள் மதியம் பிரதான பண்டிகை நடைபெற்றது. முதல் 35 ஆண்டுகளாக தேவாலயத்தின் வடக்கு புறம் இருந்த தேவாலய வளாகத்தில் பண்டிகை நடத்தப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை தேவாலயத்தின் முன்புள்ள வளாகத்தில் அலங்காரப்பந்தல் அமைக்கப்பட்டு பண்டிகை நடைபெற்று வருகிறது.

### நல்லூர் திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

1930 ஆம் ஆண்டு நல்லூர் சபையில் நல்லூரில் மட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 198 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 88 பேர். தொடக்க காலத்தில் நல்லூர் திருச்சபை நல்லூர் தேவாலயத்திற்கு நல்லூர் மட்டுமல்லாது காசியாபுரம், சமாதானபுரம், சிவலார்குளம், ஆலடிப்பட்டி ஆகிய இடங்களில் இருந்தும் சபையார் வந்து கொண்டிருந்தனர் அவர்களின் எண்ணிக்கை தனித்தனியே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1943 ஆம் ஆண்டு நல்லூர் சபையில் நல்லூரில் மட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 258 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 138 பேர். 1956 -1957 ஆம் ஆண்டு நல்லூர் திருச்சபையில் நல்லூரில் மட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 264 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 125 பேர். 1970 -1971 ஆம் ஆண்டு நல்லூர் திருச்சபையில் நல்லூரில் மட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 296 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 184 பேர். 1997 -1998ஆம் ஆண்டு நல்லூர் திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 632 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 411 பேர். இந்த கணக்கெடுப்பில் நல்லூர் (தேவாலயத்திற்கு வருகிற அனைவரும் நல்லூர் சபை கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்) சிவலார்குளம் மட்டும் தனி சபையாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2002 - 2003 ஆம் ஆண்டு நல்லூர் திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 783 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 571 பேர்.

### தற்போதைய நல்லூர் திருச்சபை

சமீப காலத்தில் நல்லூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏராளமான குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றவண்ணம் உள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளில் 80 க்கு மேற்பட்ட பெரியவர்கள் நல்லூர் தேவாலயத்தில் பருவங்கடந்த ஞானஸ்நானத்தைப் பெற்றுள்ளனர். தற்போதைய நல்லூர் திருச்சபையில் 1893 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 842 பரி. நற்கருணைக்காரர்களும், 280 விசுவாசக் குடும்பங்களும் உள்ளனர். அறிவர் கனம். பிரே. எஸ். ஜேம்ஸ் ஐயரவர்கள் நல்லூர் (மேற்கு சபை மன்றத் தலைவர்) சேகர தலைவர் ஆகவும், திரு. மதன் சாமுவேல் நல்லூர் சபை ஊழியர் ஆகவும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்


மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |



# பாரெங்கும் பேராலயங்கள் 2

புனித தோமா கதீட்ரல், மும்பை St. Thomas Cathedral, Mumbai


சந்திரா மனோகரன், ஈரோடு.

அண்மையில் மும்பை சென்றபோது, 300 ஆண்டுகள் பழமையான புனித தோமா பேராலயத்தைக் காண நேர்ந்தது. இந்தியாவுக்கு முதன் முதலில் கிறிஸ்துவ மதம் பரவுவதற்குக் காரணமாக இருந்த புனித தாமஸ் அப்போஸ்தலன் நினைவாக இப்பேராலயம் அழைக்கப்படுகிறது. இது தெற்கு மும்பையில் உள்ள ஹார்னிமன் வட்டத்தில் அமைந்துள்ளது. ஃப்ளோரா நீரூற்று மற்றும் பாம்பே அவுஸ் போன்ற பிரபலமான இடங்களுக்கு அருகில் உள்ளது.

இத்தேவாலயம் 1718 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு 1837 ஆம் ஆண்டு புதுப்பித்து, விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்தியாவின் பழமையான தேவாலயங்களில் ஒன்றான இதற்கு 1676 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு, 1718 ஆம் கிறிஸ்துமஸ் தினத்தன்று வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டது. இத்தேவாலயத்துக்குச் செல்லும் வாயில் 1864 ஆம் ஆண்டில் ஃப்ளோரா நீரூற்றாக மாற்றப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. ஆங்கிலேயர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியைப் பாதுகாக்கக் கூடிய வகையில் கட்டப்பட்ட கோட்டையின் வாயில்தான் இன்றளவும் 'சர்ச் கேட்' என்று அழைக்கப்படுகிறது.

மும்பையின் (அப்போதைய பம்பாய்) முதல் பேராயர் தாமஸ் கார் என்பவர் நியமிக்கப்பட்ட பின்னர் 1837 ஆம் ஆண்டு இத்தேவாலயம் ஒரு கதீட்ரலாக புனிதப்படுத்தப்பட்டது. 1911 ஆம் ஆண்டு கால கட்டத்தில் அரசர் ஜார்ஜ் V மற்றும் ராணி மேரி ஆகியோர் வழிபாட்டில் கலந்து கொண்டதற்கான அடையாளமாக அவர்கள் அமர்ந்து தொழுகை புரிந்த நாற்காலிகள் இன்றளவும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்கிறார்கள். இந்தத் தொன்மையான தேவாலயத்தின் 300 ஆவது ஆண்டு நிறைவு நாள் கடந்த 2018 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று நிறைவு கூறப்பட்டது.

## பள்ளி சான்றிதழில் மர்காஷிஸ் கையெழுத்து பொக்கிஷம்



THIRD FORM EXAMINATION.

CERTIFICATE.

This is to certify that G. Mani...

passed the Third Form Examination

in all subjects in December 1906. and was placed

in the FIRST / SECOND class.

St. John's Boys' L.S. School, 12-9-07. Nazareth

A. Margoschis

Manager.

மணியாச்சி-கடம்பூர் ஜமீன் வழி வந்த மனுவேல் தலைவர் ஐயா அவர்களின் தந்தை திரு. ஞானசிகாமணி மணி ஐயா தலைவர் அவர்கள் 1907- ஆம் ஆண்டு அவர் படித்தது St. John's Boys' Lower Secondary School, நாசரேத் பள்ளியில் அவர் எட்டாம் வகுப்பு படிப்பு முடித்தவுடன் (அன்றைய Third Form) அதற்கான சான்றிதழை நாசரேத்தின் தந்தை ஆர்தர் மர்காஷியஸ் அவர்கள் தன் கைகளால் எழுதி கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். (செப்டெம்பர் 12, 1907) (Benjamin Henry Arthur Margoschis.) அந்த அசல் சான்றிதழ் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. வரலாற்று பொக்கிஷங்களை பாதுகாத்து வரும் குடும்பங்களை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.




# CHS - LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by May 2025.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

# வரலாற்றுச் சுவடுகளில் ஒரு பயணம்: கிறிஸ்தவ ஆலயங்கள்




மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக ஒருங்கிணைந்த திருநெல்வேலி பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு அநேகர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வரும் லெந்து நாட்களில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் வட நெல்லை, கீழ் நெல்லை, டோனாவூர், தென் நெல்லை என்று திட்டமிட்டுள்ளோம். பிற மாவட்டங்களில் இருந்து வரும் ஆர்வலர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர தயராக இருக்கின்றோம். முன்பதிவு செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**+91 9176780001**







**கட்டுரை ஆசிரியர் ரெமினா சுஜித் எழுதி வரும் திருநெல்வேலி திருச்சபையின் வரலாற்றுத் தொடர் அடுத்த மாதத்திலிருந்து வெளி வரும்**



# ஓடிப் போனவன்...

தொடர் 6

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர் முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடர்....**

கோகிலா தஞ்சையை ஆட்சி செய்த துளசாசி மன்னனின் அரசவையில் பணிசெய்த ஒரு முதியவருக்கு மனைவியாக்கப்பட்டிருந்தாள். குழந்தைத் திருமணங்கள் சர்வசாதாரணமாக நடைபெற்ற காலகட்டமது.

அரசவையில் பணியாற்றுபவர்களுக்குத் தங்களது குழந்தைகளைத் திருமணம் செய்து வைப்பதை மக்கள் அதிர்ஷ்டமாகவே கருதினர். இராஜ அந்தஸ்தும், மரியாதையும் அந்தச் சிறுமியால் அக்குடும்பமே பெறுமென்றால் யார்தான் வெறுப்பார்! ஆனால் மணமகளான அப்பெண்ணின் உண்மை நிலைமையை அவளைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஒருசில ஆண்டுகளில் கோகிலாவின் கணவனான அந்த முதியவன் இறந்தும் போனான். கணவன் இறந்ததும் உயர்குல மக்களாக கருதப்பட்ட ஒரு பிரிவினர் கணவனின் உடல் எரியும் சிதையில் அந்த மனைவியையும் தள்ளி கொன்று விடுவது வழக்கம். இதற்கு உடன்கட்டை ஏறுதல் என்றும் பெயர் வைத்திருந்தனர். அவ்வாறு செய்வதால் அப்பெண் தெய்வமாகி விடுவாள் என்றும் அது அப்பெண்ணின் குடும்பத்தாருக்குப் பெரும் பாக்கியமாகவும் கருதப்பட்டது.


உண்மையில். . . . அவள் அதன் பிறகு உயிருடன் இருந்து இன்னொருவனை நினைத்தும் பார்த்துவிடக்கூடாது என்ற அடிப்படை வன்ம நோக்கமே அதற்கான காரணம். ஆனால் ஆணுக்கு அப்படியல்லாம் எந்த விதிமுறைகளும் கிடையாது. அவன் மனைவி உயிருடன் இருந்தாலும் தான் விரும்பினால் எத்தனைப் பெண்களையும் திருமணம் செய்து வாழ்நாளெல்லாம் இன்புற்று இருக்கலாம். இங்கு கோகிலாவும் சாகும் தருவாயில் இருந்த முதியவருக்கு அப்படிதான் மனைவியாக்கப்பட்டிருந்தாள். ஆனால் காலம் தன் பணியைக் கச்சிதமாகச் செய்தது. . . ! அவனுக்கு மரணத்தைப் பரிசளித்து, கோகிலாவைத் தத்தளிப்பிற்குள் தள்ளிவிட்டது. மக்கள் தங்கள் கட்டுப்பாடுகளை நிறைவேற்ற முண்டியடித்து நின்றனர்.

பெற்றவர்களும் விதியை நொந்து கொண்டு மகளை நெருப்புக்கு இரையாக்கிட தயாராகினர். சுடு மணலிலும் நடந்து செல்ல துணியாத கோகிலா கொழுந்து விட்டு எரிந்த கணவனின் சிதையைக் கண்டு நடுநடுங்கினாள். தன்னை அதில் தள்ளிவிட மணமகளைப் போல மீண்டும் அலங்கரிக்கப்பட்டாள். தன் கழுத்தில் தாலி கட்டும் முன் தன்முன் எரிந்த ஓம குண்டத்தை வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்த கோகிலா இன்று அது தன்னை வா வா என்று அழைப்பதைப் போல் உணர்ந்தாள். தன்னை அதனிடமிருந்து தப்புவிக்க வேண்டி தன் குடும்பத்தாரைப் பார்த்துக் கதறினாள், கெஞ்சினாள். அவர்களோ, மரணத்திற்குப் பின் தங்கள் குடும்பத்தைக் காக்கப் போகும் தெய்வமாக அவளைப் பார்த்து அவளை வணங்கித் தொழுது நின்றனர்.

திருமணச் சடங்கு போலவே இங்கும் பல சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனிடையே கோகிலாவின் அலறல் சத்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. சடங்குகள் முடிந்து கடைசியாய் அவளை நெருப்பில் தள்ளிவிட அதற்கான

நபர்கள் அவளைத் தூக்கினர். அவளது எதிர்ப்பும், மரண ஓலமும் அப்பலவந்தர்களின் கைப்பிடிக்குள் அடங்கிகொண்டிருந்தது. அழுகுரல் மட்டும் இயற்கையைத் தவிப்பில் ஆழ்த்தி அதை அதிர வைத்துக் கொண்டிருந்தது. அச்சமூகத்தின் மிக கொடூரமான அந்நிலைப்பாடு ஆங்கிலேயர்களுக்கும் தெரிந்ததுதான். ஆனாலும் இந்தியக் கலாச்சார மரபுகளில் தலையிடுவதையோ தடுப்பதற்கோ அவர்களுக்கு அதிகாரம் கிடையாது.

ஆனாலும் இத்துயர சம்பவங்களை ஆங்காங்கே கேள்விப்படும் போது சில நாட்களுக்குத் தங்களுக்குள் பேசிப்பேசி ஆதங்கத்தைத் தீர்த்துக்கொள்வர். வேறு என்னத்தை தான் அவர்களால் செய்து விட முடியும். . . !? காலாகாலமாக எங்கும் இது தானே நடைபெற்று வருகிறது. . . ! அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடும் தன்மை யாருக்காவது எங்காவது வந்தாலும் அது அறிவீனமானதாக நசுக்கப்படுவதுதானே மிச்சம். . . !? இந்த விசயத்திலும் அப்படித்தான் நடந்து கொண்டிருந்தது!



கோகிலாவின் மரண ஓலம் அந்த வழியாக குதிரையில் சென்று கொண்டிருந்த ஆங்கிலேயப்படை வீரன் ஒருவனின் காதில் விழ. . அவன் தன் குதிரையை நிறுத்தி சத்தம் வந்த திசையை நோக்கி எட்டிப் பார்த்தான். அப்போதுதான் கடைசி கட்ட நடவடிக்கையாக அவளை வலுக்கட்டாயமாக நெருப்பண்டை இழுத்துச் செல்லும் படலம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அவனால் தன் ஆதங்கத்தை அடக்கி விலகிச் செல்லவோ முணுமுணுத்தபடி அகன்று போகவோ முடியவில்லை. ஏதோ ஒன்று அவனை நகர விடாமல் தடுத்து நிறுத்தியது. தன் குதிரையோடே வெடுக்கென பாய்ந்து அவளைத் தூக்கி தன்குதிரையின் மேல் ஏற்றிப் போட்டுக் கொண்டு அங்கிருந்து கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பறந்தார்போல் விரைந்து விட்டான். அதனைச் சற்றும் எதிர் பாராததால் எதிர்க்க முடியாமல் ஸ்தம்பித்து நின்றனர் அனைவரும். அதிலும் ஆங்கிலேய பட்டாளத்து அதிகாரி என்பதால் எளிதில் எதிர்க்கத் துணியவில்லை. மாற்றான் ஒருவனால் தொட்டுத் தூக்கப்பட்ட அவள் அவர்களுக்குத் தீட்டானவளாக கருதப்பட்டதால் அன்றே அவள் செத்துப் போனதாய் அதற்கான காரியங்களையும் அங்கேயே செய்து முடித்துவிட்டு கிளம்பினர்.

அதிர்ச்சியாலும், பயத்தாலும் சுயநினைவற்று மயங்கி கிடந்த கோகிலாவை தன் இருப்பிடத்திற்கே கொண்டு சென்றான் அத்தீரன். அவளுக்கு மருத்துவம் பார்த்து தெளிவடைந்த பின் நடந்தவற்றை அவளுக்கு விவரித்தான். அவளை ஒரு குழந்தையைப் போல கவனித்துக் கொண்டான். தன் நிலையை எண்ணி நெடுநாட்களாய் கவலையுற்றிருந்த கோகிலா கொஞ்சம் கொஞ்சமாய் ஆறுதல் அடைந்தாள். தெய்வபக்தி நிறைந்த அந்த வீரனின் பெயர் லிட்டில்டன். அவன் அவளை ஆறுதல் படுத்த, தான் அறிந்திருந்த இயேசு தெய்வத்தைப் பற்றி அவளுக்குப் போதித்தான். ஆரம்பத்தில் தான் வேறு எந்த தெய்வத்தையும் ஏற்பது குற்றம் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தாள்.

ஆனாலும் தன்னைக் காப்பாற்றி தனக்கு அடைக்கலமும் தந்து உதவும் ஒருவனின் தெய்வமும் நல்லதாகதான் இருக்கமுடியும் என்ற நம்பிக்கை அவளுக்குள் ஊற்றெடுக்க அவள் மெல்ல மெல்ல அவனது அந்தத் தெய்வ நம்பிக்கையில் மூழ்கத் தொடங்கினாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக லிட்டில்டன் தன்னிடம் உண்மையான அன்பையும், முழுச் சுதந்திரத்தையும் கொடுத்தருந்தது அவளை கவர்ந்திருந்தது. அதுவரை அவள் பெற்றிராத மகிழ்ச்சியை அவனால் உணர்ந்தாள். தன்னை பெண் தானே என்று எந்தவிதத்திலும் தவறாக பயன்படுத்த முயலாமல் சுதந்திரமாக வாழ்க்கையை வாழ அனுமதித்து அவன் தன்னிடம் நடந்து கொண்ட விதம் அவளுக்குப் புதுமையான வாழ்க்கை அனுபவமாக இருந்தது; அவன் மீதான நம்பிக்கையையும் மரியாதையையும் நாளுக்கு நாள் அதிகப்படுத்தியது.

ஆனாலும் அவர்கள் இணைந்திருப்பதை வெளி உலகம் வேறு கண்ணோட்டத்தில் பார்த்தது. திருமணம் ஆகாத இந்த ராணுவ அதிகாரியான வீரன் வாலிபத்தின் தொடக்கத்தில் இருந்த கோகிலா இருவரையும் சேர்த்து காதல் கதைப் பேசிப் பொழுதைக் கடத்தியது. அன்றைய காலகட்டத்தில் ஆங்கிலேய இராணுவத்தினர் இந்தியப் பெண்களைத் தங்களது ஆசை நாயகிகளாக வைத்துக் கொள்ளுவது சாதாரணமானது. எனவே லிட்டில்டனும் கோகிலாவும் அவ்வாறே மற்றவர்கள் பார்வையிலும் தெரிந்ததும் வியப்பானதில்லை.

இதனிடையே அவர்களது வாழ்க்கைச் சூழலும் மிக நெருக்கடியானதாக இருந்தது. இனி கோகிலாவே நினைத்தாலும், விரும்பினாலும் அவளது குடும்பத்தோடு இணைய முடியாது. லிட்டில்டனுக்கும் சூலை என்ற கடுமையான வயிற்றுவலி அவ்வப்போது ஏற்பட்டு உழன்றான். அந்நிலையில் கோகுலா அவனுக்கு உறுதுணையாக இருந்தாள். எனவே ஆதரவற்றிருந்த கோகிலாவும், லிட்டில்டனும் நாளடைவில் கணவன் மனைவியாக வாழத் தொடங்கினர். ஆனால் முறையான திருமணம் செய்து கொள்ளும் சட்டமில்லாத காரணத்தால் திருமணம் செய்து கொள்ள இயலவில்லை.

லிட்டில்டன் கோகிலாவுக்கு தனது அன்பை மட்டுமல்லாது தான் பின்பற்றின இயேசுவின் அன்பையும் கிறிஸ்தவ நெறிமுறைகளையும் சேர்த்தே வழங்கினான். இறுதியாக அவள் தன் திருமணத்தைப் பற்றிகூட யோசிக்காமல்

கிறித்தவ மார்க்கத்தில் வாழ விரும்பினாள். எனவே அதற்கு முதல் கட்டமாக இருந்த ஞானஸ்நானம் என்ற கிறித்தவ அடிப்படைக் கொள்கையை நிறைவேற்றி முழுக் கிறித்தவளாக வாழ விரும்பினாள்.

அந்நிலையில் தான் லிட்டில்டன், பாதிரியார் சுவாட்சை அணுகி தான் கோகிலாவை உண்மையாக நேசிப்பதாகவும், அவளை தன் மனைவியாக ஏற்று வாழ்வதாகவும், அவளும் தன் மீது அன்புகூர்ந்து வாழ்கிறாள் என்றும் கூறி, முறைப்படி கிறித்தவளாக வாழ விரும்பும் அவளுக்கு ஞானஸ்நானம் தரும்படி கேட்டார். ஆனால் சுவாட்சு முறையான திருமணத்தைச் செய்துக் கொள்ளாத பட்சத்தில் தான் அவளுக்கு ஞானஸ்நானம் அளிப்பது சரியல்ல என்று மறுத்துவிட்டார். ஆனாலும் காலம் சரியான தருணத்திற்காகக் காத்துக் கிடந்து அதை நிறைவேற்றி முடித்தது.

கோகிலாவாக இருந்து தன்னால் குளோரிந்தாள் என்ற பெயர் மாற்றத்துடன் ஞானஸ்நானம் பெற்ற அவளைப் பற்றி தான் கேள்விப்பட்டிருந்த விசயங்களைத் தனது சீடர்களுக்குத் தெரிவித்தார். மற்றவர்களைவிட சுந்தர் தனது ஜில்லாவிலேயே வாழும் அந்த குளோரிந்தா என்ற பெண்ணைப் பற்றி அதிகளவில் ஆச்சரியமடைந்தான்.

'ஒருவேளை கடவுள் என் வாழ்நாளில் ஒருமுறையாவது என் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்வாரானால். . . எப்படியும் அந்த அம்மையாரைக் கண்டு அவர்களிடம் ஆசிர்வாதம் பெறுவேன். . . . என்னைப் போலவே திக்கற்ற நிலமையில் இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருக்காகவே வாழும் அந்தத் தாயாரைக் காண்பதே என் பெரும் பாக்கியம்'' என்றான். 'ஆம். . . . கடவுள் நினைத்தால் முடியாதது எதுவும் இல்லை. நம்பிக்கையோடு இரு சுந்தர்' என்றான் அவனது நண்பனான ஒரு சீடன்.



'சுந்தர், உனக்கொன்று தெரியுமா. . . ஒருசில வருடங்களுக்கு முன்பு அந்த அம்மையார் இங்கு வந்திருந்தார்கள். அவர்களுடன் ஒரு வாலிபனான சிறுவனும் வந்திருந்தான். நான் பார்த்திருக்கிறேன். உனக்கு ஞாபகம் இல்லையா பிரகாசம். . !?'

'ஆமாம். . . அவர்களாக தான் இருக்க வேண்டும் என்று, அன்று ஐயா நம்மிடம் அம்மையாரைப் பற்றின விசயங்களை கூறும்போதே எனக்குள்ளும் தோன்றியது. ஆனால் உறுதியாக நினைக்கவில்லை. எனவே எதுவும் நான் அன்று காட்டிக் கொள்ளவில்லை.'

'அப்படியா. . . . நான் இங்கு வரும் முன்பா?' என்றான் சுந்தர். 'ஆமாம். . . !'

'சரி அந்த சிறுவன் அவர்கள் மகனா?' 'இல்லை, இருக்காது. அவர்களுக்கு குழந்தை இல்லை என்று தானே ஐயா கூறினார். அவர்கள் பாதுகாப்பில் நிறையபேர் இருப்பதாக கூறினாரல்லவா., ? அவர்களுள் ஒருவனாக இருக்கும். அங்கிருந்து நடந்தே வந்திருப்பதாக அப்போது அவர் பேசிக் கொண்டதை கவனித்திருக்கிறேன்.'

'நடந்தே ஒரு பெண் அங்கிருந்து இங்கே வந்தார்களா!? எத்தனை அன்பும் பற்றுருதியும் இயேசுவில் வைத்திருந்தால் அப்படி வர முடியும்!? நான்கூட அங்கிருந்து கருப்பட்டி ஏற்றிவரும் மாட்டு வண்டிகளில் தான் வாய்க்கு வந்த பொய்களையெல்லாம் சொல்லி, கெஞ்சி கூத்தாடி ஒரு வழியாக முதலில் இராஜபாளயம் என்ற ஊருக்குச் சென்றேன். அங்கு இரண்டு வருசங்களைக் கழித்தேன். பிறகுதான் தஞ்சைக்கு வந்து சேர்ந்தேன். . . !' என்றான் பெருமூச்சு விட்டபடி. 'சரி சரி அதையெல்லாம் இனி நினைக்காதே சுந்தர். . . . இப்போது நீ புது மனுசனாகி விட்டாயல்லவா ? இனி நீயும் ஞானஸ்நானம் பெற்று தாவீதாய் மாறிவிட்டால் இன்னும் அதிகமாய் ஜொலிப்பாய் பாரேன். . . . !' என்றான் அவர்களுள் மற்றொரு நண்பன் தாவீது . . . என்றதும் சுந்தரின் முகம், மீண்டும் குதூகலத்தாலும் மெல்லிய வெட்கத்தாலும் மலர்ந்தது.

**மலர்வான் சுந்தர்**

கிறிஸ்தவ
**வரலாற்றுச் சுவடுகள்**

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**London Missionary Society's**

**Mission works at Erode District**




# ஈரோடு மாவட்டத்தில் லண்டன் திருத்தொண்டர்களின் திருப்பணிகள்




**ஜே.பர்னபாஸ்**

**சேலம் வரலாற்றுச் சங்கம்**


## ஈரோடு பற்றி:

கொங்கு நாட்டின் இதய பகுதி ஈரோடு என்பார்கள். சேர, சோழ, பாண்டிய நாடுகளோடு, கொங்கு நாடும், தொண்டை நாடும் சேர்ந்து ஐந்து நாடுகள் கொண்டது தமிழ் நாடு. கொங்கு நாடு 24 நாடுகளைக் கொண்டிருந்தது. இந்த 24 நாடுகளில் முதல் நாடான பூந்துறை நாட்டின் 32 ஊர்களில் சிறப்பான ஊர் ஈரோடு ஆகும். கி.பி. 1800ல் ஆங்கிலேய திருப்பயணி திரு. பிரான்சிஸ் புக்கானன் ஈரோட்டில் தங்கி தனது பயண அறிக்கைகளைத் தயாரித்தார். 'கி.பி. 1800ல் கொங்கு நாடு' என்ற நூலை திரு. இடைப்பாடி அமுதன் என்ற சேலம் வரலாற்று எழுத்தாளர் எழுதியுள்ளதையும் இங்கே நினைத்துப் பார்க்கின்றேன். இங்கு கி.பி. 1643ஆம் ஆண்டிற்கு முன்பே ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று ஈரோடு வந்த முதல் ரோமன் கத்தோலிக்க இயேசு சபை குருவானவர் சங்கை டீ காஸ்டோ (Rev. Fr. B. De Costa, S. J.) இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஈரோடு மாவட்டத்தில் லண்டன் மிஷன் வரலாறு - டாக்டர் ப. ஜோதிபாக்கியம், முதல் பதிப்பு-2006, ஈரோடு)

சேலம் மாங்கனி மாநகரம் என்றால் ஈரோடு மஞ்சள் மாநகரம். தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாட்டில் அமைந்த பீடபூமியின் தொடர்ச்சியில் அமைந்ததே ஈரோடு. நீர்வளம், நிலவளம், மலைவளம் நிரம்பப் பெற்ற வளமையான பகுதி ஈரோடு. இங்கு பாயும் முக்கிய ஆறு காவேரி, இதன் துணையாறுகள் பவானி, நொய்யல், அமராவதி, சித்தாறு மற்றும் குரங்கன் என்பவை. விவசாயம் மற்றும் ஜவுளி இங்கு முதன்மை பெற்று விளங்குகிறது. பவானி கூடுதுறை சிறப்பானது. காவேரியோடு பவானி சங்கமிக்கும் இடத்தில் அமுதாநதி கற்பனையாக கலப்பதாக சொல்லப்படுவதால் இது முக்கூடல் எனப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை, சிவன்மலை, பண்ணாரி, கொடுமுடி, மற்றும் வெள்ளோடு ஆகியவை இயற்கை வனப்பான இடங்கள். நொய்யல் ஆற்றங்கரையில் சென்னிமலைக்கு அருகே உள்ள கொடுமணல் 2000ஆண்டுகளுக்கு மேலான தொன்மை பெற்றது. ஈரோடு மாவட்டத்தின் இயற்கை எல்லைகளாக வடக்கே மேற்குத் தொடர்ச்சி மலைகளையும், கிழக்கின் எல்லையாக காவேரி ஆற்றையும், தெற்கே நொய்யல் ஆற்றையும் சொல்லலாம்.


பெரும்பள்ளம் ஓடை மற்றும் பிச்சைக்காரன் பள்ளம் ஓடை ஆகிய இரண்டு ஓடைகளுக்கு நடுவே அமைந்த "ஈரோடை" என்ற ஊரே இந்த "ஈரோடு" உருவாக காரணமானது. "ஈரோடை" என்பதே மருவி "ஈரோடு" ஆனது. ஈரோட்டின் கிழக்கே சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்கள், வடக்கில் கர்நாடக மாநிலம், தெற்கில் திருப்பூர், கரூர், மேற்கில் கோவையும், நீலகிரியும் உள்ளன. 1979ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1979 செப்டெம்பர் மாதம் 17ஆம் நாள் கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு பெரியார் ஈரோடு மாவட்டம் உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டுவரை பெரியார் மாவட்டம் என்றும் அதன் தலைநகரம் ஈரோடு என்றும் இருந்தது. ஆனால் அதன்பின்பு ஈரோடு மாவட்டம் என அழைக்கப்படலாயிற்று.

## ஈரோட்டின் சான்றோர்கள்:

ஈரோட்டில் தோன்றிய, அல்லது உருவான, சான்றோர்கள் ஏராளம். அதில் கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள், பல்சமய அறிஞர்கள், சமூக சேவகர்கள், மற்றும் கல்வியாளர்கள் அநேகர். அவர்களில் இன்றைய ஈரோடு வட்டத்தின் செல்வ செளிப்பிற்கும், வளத்திற்கும், மூல காரணமான காளிங்கராயன் கால்வாயை வெட்டிய வள்ளல் காளிங்கராயன், கொங்கு நாட்டுச் சிங்கம் தீரன் சின்னமலை, கணித மேதை ஸ்ரீநிவாசஸ ராமானுஜர், கொடிகாத்த தியாகி திருப்பூர் குமரன், கிறிஸ்துவத் திருத்தொண்டர்கள் பாப்லி வெண்பா புகழ் ஈரோட்டு வெள்ளைத் தமிழர் சங்கை H. A. பாப்லி மற்றும் ஈரோட்டின் முதல் நகரமன்ற தலைவரும், பிரப் கிறிஸ்தவ தேவாலய ஸ்தாபகரும், ஈரோடு பிரப் ரோடு புகழ் சங்கை A. W. பிரப், வைக்கம் வீரர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், இராவண காவியம் தந்த புலவர் குழந்தை, எழுத்தாளர் பத்மபூசன் ம. பெ. தூரன், திரு. V. M. கைலாச கவுண்டர், கல்வியாளர் மீனாட்சி சுந்தரனார், திரு. M. A. ஈஸ்வரன், போன்றோர் இங்கே சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள். (ஈரோடு டைரி 2001 - பதிப்பாசிரியர் தூரன். நல். நடராசன்,

பல்லவி பதிப்பகம், ஈரோடு)

**ஈரோடு – வரலாற்றின் பாதையில்:**



ஈரோடு பகுதிக்கு வந்த முதல் சீர்திருத்த கிறிஸ்தவத் திருத்தொண்டர் சங்கை கிறிஸ்தியான் ஃபிரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் ஐயர் ( Rev. Christian Frederick Schwartz - of the early Danish Missionary Society - period of service -1750-98) (Indian Missionary Directory and Memorial Volume - Rev. B. H. Badley, M. A., 3rd edition, Calcutta, 1886) அவர் 1779ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தை மேற்கொண்டார். மைசூர் ஏகாதிபத்தியத்தின் அதிபதி ஹைதருக்கும், பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியாருக்கும், இடையே தனிநபர் சமாதான தூதுவராக ஐயரின் பயணம் அமைந்திருந்தது (Schwartz's Mission to Hyder Ali -1779). திருச்சிராப்பள்ளியிலிருந்து கரூர் வந்தடைந்த ஐயரின் அமைதிக்கான இந்த பயணம் கொடுமுடி, ஈரோடு, பவானி, என்று இந்த பகுதிகளில், சீர்மிகு பவனியாக இல்லாமல் ஒரு எளிமையான இரகசிய பயணமாகவே இது இருந்தது. தனது நம்பிக்கைக்கு உரிய உபதேசியார் சத்தியநாதனை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தனது உதவியாட்கள் மற்றும் உணவு, பயணத் தேவைகளுக்கான வண்டிகளுடனும், சங்கை சுவார்ட்ஸ் ஐயர் இந்த பயணத்தை மேற்கொண்டார்.

பல்லக்கில் பயணிக்கும் வழக்கம் கொண்ட ஐயர், செல்லும் இடமெங்கும் கிறிஸ்தவ நற்செய்தியை அறிவித்து, அனைத்து தரப்பு மக்களிடமும் கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றியும், உரையாடி ஒரு நற்செய்தி அறிவிப்பாளராக, சமாதான தூதுவராக, ஐயர் இந்த பகுதிகளைக் கடந்துச் சென்றிருக்கிறார். ஈரோட்டில் பூர்வீகமாக வாழ்ந்திருந்த ரோமன் கத்தோலிக்க



கிறிஸ்தவர்களிடையேயும், பிராமணர்களிடையேயும் சங்கை சுவார்ட்ஸ் ஐயர் கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

போரிட்டுக் கொண்டிருந்த பிரிட்டீஷ் மற்றும் ஹைதர் தரப்பிடமிருந்தும் எந்த ஒரு உதவிகளையும், வெகுமதிகளையும் பெற்றுக் கொள்வதில்லை என்ற முடிவுடன் மிகவும் ஆபத்தான இந்த பயணத்தை ஐயர் மேற்கொண்டது இந்த தென்னிந்திய பகுதிகளில் பேரழிவையும், இரத்தம் சிந்துதலையும் தடுத்து, நிலைத்த சமாதானத்தை ஏற்படுத்தவும், கிறிஸ்துவைப் பற்றி ஒருமுறைகூட அறிந்திராத மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கவுமே, என்ற சங்கை சுவார்ட்ஸ் ஐயரின் நோக்கம் இங்கே குறிப்பிடத்தக்கது (Memoirs - Life and Correspondence of the Reverend Christian Frederick Swartz - Hugh Pearson, Vol. 1, London, 1839)

**ஈரோடு – லண்டன் மிஷன் பணித்தளம்:**

1791ல் ஈரோடு பகுதிகள் கிழக்கிந்திய கம்பெனியார் வசம் வந்தது; ஆனாலும் நிரந்தர சமாதானம் இல்லை. 1799ல் திப்புவின் இறுதி தோல்விக்குப் பின்னர் இந்த பகுதிகளின் தலைநகராக பவானி உருவாகிறது. 1804 ல் மாவட்ட தலைநகர் பவானியிலிருந்து கோவைக்கு மாற்றம் கண்டது.

**சங்கை W. B. ஆடிஸ் ஐயரின் திருப்பணிகள்:**

1827ஆம் ஆண்டு சேலத்திலும், அதனைத் தொடர்ந்து 1830ல் கோயம்பத்தூரிலும் லண்டன் மிஷன் பணித்தளம் துவக்கப்பட்டது. சங்கை W. B. ஆடிஸ் ஐயர் (Rev. William Bawn Addis, L. M. S., -1800-1871) கி. பி. 1830 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் (கோயம்பத்தூர்) லண்டன் மிஷன் பணித்தளத்தைத் துவக்கினார்; கோவை மாவட்டத்திற்கு அப்பொழுது 15 வெளியூர் நிலையங்கள் (Out stations) ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது தாலுக்கா தலைநகராகக் கூட உயர்த்தப்படாத ஈரோடும் ஒரு வெளியூர் நிலையமாக இருந்தது. சங்கை ஆடிஸ் ஐயர் பல இந்திய தன்னார்வத் திருத்தொண்டர்களை/ உபதேசியார்களை உருவாக்கி, அவர்களை பல்வேறு வெளியூர் நிலையங்களுக்கு பொறுப்பாளர்களாக நியமித்தார். இவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாக பணிசெய்துகொண்டு அதேசமயம் நற்செய்தி அறிவிப்பு பணியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்தவர்கள் (Teacher- Catechists). இப்படி ஒரு ஆசிரியர் ஈரோடு பகுதிக்கு 1836ஆம் ஆண்டு முதன்முதலில் அனுப்பப்படுகிறார். அவரது கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்பு பணிகளின் பயனால் ஈரோட்டில் வள்ளுவ மரபைச் சேர்ந்த குருநாதன் என்பவரே கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக் கொண்ட முதல் கிறிஸ்தவர். 1840ஆம் ஆண்டு ஈரோட்டில் ஒரு லண்டன் மிஷன் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது.

**முன்னோடி திருத்தொண்டர்களும் அவர்தம் பணிகளும் :**

தொடர்ந்து பல இந்திய தன்னார்வத் திருத்தொண்டர்கள் (Native Teachers cum Preachers) இந்த பகுதியில் தங்கள் பணிகளை முன்னோடியாக செய்து வந்தனர். அவர்களுள் சுவிசேஷகர்

சாலமோன், சுவிசேஷகர் தானியேல் ஆகியோர் இங்கே குறிப்பிடத்தக்கவர்கள். சங்கை ஆடிஸ் ஐயருக்குப் பிறகு, சங்கை மாப்ஸ் ஐயர் (Rev. Goodeve Mabbs, L. M. S) மற்றும் சங்கை W. E. மோரிஸ் ஐயர் (Rev. William Edward Morris, L. M. S.) ஆகியோர் ஈரோடு பணித்தளத்தை கரிசனையோடு கவனித்து வந்தனர். சங்கை மோரிஸ் ஐயரிடமிருந்து 1865ல் சங்கை சாமுவேல் ஜோன்ஸ் ஐயர் (Rev. Samuel Jones -1830-1877) ஈரோட்டின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். சங்கை ஜோன்ஸ் மற்றும் சங்கை ஜோஸ் ஆகியோரின் காலங்களில் இவர்களது அயராத முயற்சிகளால் அநேகர் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். காஞ்சிக் கோயிலில் திரு. சாமுவேல் என்பவர் “மக்கள் இயக்கத்தின் அப்போஸ்தலன்” என அழைக்கப்பட்டார். 1872 ஆம் ஆண்டு வாக்கில் தனது இனமக்களும் உறவினர்கள் அனைவரிடமும் அவர் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார். பல கிராமங்களில் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

### ஆலயங்களும் மக்கள் இயக்கங்களும் :

ஈரோட்டில் மிஷனுக்குச் சொந்தமான ஒரு பகுதி நிலத்தை விற்றதிலும், உறுப்பினர்கள் கொடுத்த பணத்தைக் கொண்டும் ஒரு சிறு ஆலயமும், உபதேசியார் தங்க ஒரு வீடும் ஈரோடு பழைய இரயில் நிலையம் அருகில் கி. பி. 1881ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 04-12-1881 ஞாயிற்றுக் கிழமையன்று இந்த சிற்றாலயம் திருநிலைப்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கு முன்பே 1880ல் ஈரோட்டில் ஒரு ஆலயம் கட்டப்பட்டதாக அறிகிறோம். அதில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஆராதனைகள் நடத்தப்பட்டது. மாலை வேளைகளில் வழக்கமாக ஒரு ஐரோப்பியர் ஆங்கில ஆராதனைகளை நடத்தி வந்தார் என்பதையும் நாம் அறிகிறோம்.


1872ஆம் ஆண்டு ஈரோடு மிஷனுக்கு ஒரு முக்கியமான ஆண்டாகும். சங்கை வால்டர் ஜோஸ் ஐயரவர்கள் (Rev. Walter Joss, L. M. S.) பட்டக்காரன்பாளையம் மற்றும் காஞ்சிக்கோயில் கிராமங்களில் வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் நற்செய்திப்பணியைத் தீவிரப்படுத்தினார். இதனால் இப்பகுதிகளிலிருந்து தொடர்ந்து கிறிஸ்தவத்தை நோக்கிய மக்கள் இயக்கம் வளர்ச்சியடைந்தது. பின்னர் வந்த மிகப்பெரிய எழுப்புதலின் துவக்கம் இதுவே. (P. no. 35, 36 - ஈரோடு மாவட்டத்தில் லண்டன் மிஷன் வரலாறு- டாக்டர். ப. ஜோதிபாக்கியம், முதல் பதிப்பு 2006, பால்ஸ் பப்ளிகேசன்ஸ், ஈரோடு.)

பட்டக்காரன் பாளையத்தில் 1885ஆம் ஆண்டு ஏறத்தாழ 40 கிறிஸ்தவர்கள் இருந்தனர். அவர்கள் ஏழ்மையும், கல்வியறிவும் இல்லாமல் இருந்தாலும் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர். ஆண்களைவிட பெண்கள் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தனர். கிறிஸ்தவ பெண்களுடன் மற்ற கிராமத்துப் பெண்களும் கிறிஸ்தவ கூட்டங்களில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு விருப்பத்தோடு காணிக்கை கொடுத்தனர். இதே ஆண்டில் இந்த கிராமத்தில் ஆறு நபர்களுக்கு சங்கை W. மாங்க் ஜோன்ஸ் ஐயர் (Rev. W. Monk Jones, L. M. S.) திருமுழுக்கு கொடுத்தார். இந்த கிராமத்தில் அநேகம்பேர் கிறிஸ்தவ சமயத்தின்பால் ஈடுபாடு உடையவர்களாக அப்பொழுது இருந்தனர்.

காஞ்சிக் கோயிலிலிருந்து 15 மைல்கள் தொலைவில் இருந்த கிராமங்களை எல்லாம் உபதேசியார் ரபேல் சந்தித்து நற்செய்தி அறிவித்தார். அந்த ஆண்டில் மட்டும் அவர் 300மைல்கள் தூரம் பயணப்பட்டு, ஏறத்தாழ 200 கிராமங்களையும், 10 சந்தைகளையும் சந்தித்து நற்செய்தி அறிவித்து மகத்தான பணிசெய்திருக்கிறார். சங்கை W. மாங்க் ஜோன்ஸ் ஐயர் தனக்குக் கீழாக உபதேசிமார்களை நியமித்து மகத்தான பணிகளை சாதித்திருக்கிறார். அவரால் ஈரோடு பகுதிகளில் நியமிக்கப்பட்ட திரு. D. ஞானமுத்து, திரு. S. சாயர் (காஞ்சிக்கோயில்) ஆகியோர் குறிப்பிடத்தகவர்கள்.

சங்கை J. சிட்னி லாங் ஐயர் காலத்தில் 1890 ஆம் ஆண்டு அறிக்கையின் குறிப்புகள்படி காஞ்சிக்கோயில் என்ற கிராமத்தில் 1878-80 ஆகிய ஆண்டுகள் கால கட்டத்திலே இந்த கிராமத்தில் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்திற்குள் வந்துவிட்டனர் என்ற தகவலை நாம் அறிகிறோம்.

ஈரோடு பகுதிகளில் நடந்த லண்டன் மிஷன் திருப்பணிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் 1, முதல் பகுதி - 1830 ஆம் ஆண்டு தொடங்கி 1872 ஆம் ஆண்டு வரையிலான ஆரம்ப காலம்., 2, 1872 ஆம் ஆண்டு தொடங்கி 1897ஆம் ஆண்டுவரையிலான கால் நூற்றாண்டு காலம்., 3, 1897 ஆம் ஆண்டு தொடங்கி 1980 ஆம் ஆண்டு பிரப் ஆலயத்தின் பொன் விழா வரையிலான மறுமலர்ச்சி மற்றும் வளர்ச்சியின் காலம்., என்று பிரிக்கலாம்.




### ஈரோட்டின் அப்போஸ்தலன் சங்கை A. W. பிரப் ஐயர்

### (Rev. Anthony Watson Brough –1861–1936)

அப்பொழுது ஈரோடு ஒரு சிறிய ஊர் கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதி (Outstation) தமிழ் தேசத்தின் லண்டன் மிஷன் பணித்தளத்தின் ஒரு சிறிய அங்கம். ஆனால் அடுத்த 30 ஆண்டுகளில் அது சந்தித்த அதி தீவிரமான வளர்ச்சி - ஒரு பெரிய தேவாலயம் அதனைத் தலைமையாகக் கொண்ட பல தேவாலயங்கள், பற்பல பள்ளிக்கூடங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தரமான மருத்துவமனை (Well -equipped

Hospital), சென்னிமலையில் மற்றுமொரு மருத்துவமனை (Herbert Brough Memorial Hospital), ஆசிரியர் பயிற்சிப் பள்ளி (Teacher Training Institute), என்று இன்னும் மகத்தான சாதனைகளைப் பெற்ற பணித்தளமாக உயர்ந்து நின்றது ஒரு அதிசயமே. இது ஒரு தனி மனிதனின் சாதனை அன்று; ஆனாலும், ஒரு மனிதர் மகத்துவமாகப் பயன்படுத்தப் பட்டதன் சாட்சியே இந்த வளர்ச்சி !

1899ஆம் ஆண்டில் 21 பஞ்சமர்களுக்கு அந்த ஞாயிற்றுக்கிழமை அப்பொழுது இருந்த சிறிய ஈரோடு ஆலயத்தில் ஞானஸ்நானம் செய்து வைத்ததிலிருந்து இவரின் சாதனை சரித்திரம் தொடர்ந்தது. இதனைத் தொடர்ந்து கவுண்டச்சிபாளையம் என்ற கிராமத்தில் 109பேருக்கு ஞானஸ்நானம் என்று சீர்திருத்த கிறிஸ்தவத்தை ஒரு மக்கள் இயக்கமாக்கினார். குறிப்பாக ஒடுக்கப்பட்ட பஞ்சமர்கள் இவரில் தங்கள் மீட்பரை கண்டடைந்தனர். அனைத்து தரப்பு மக்களிடமும், அதாவது, ஒட்டுமொத்த ஈரோடு வாழ் மக்கள் மனதிலும் நற்பெயர் பெற்றார் சங்கை பிரப் ஐயர். பிளேக் நோய் பரவிய அந்த காலத்தில் அவரது பணிகள் மகத்தானது. ஈரோடு நகரவைத் தலைவராக, ஈரோடு தாலுக்கா போர்டின் தலைவராக (First non-official president of Erode talug board) , அவரின் பணிகள் வரலாறாய் பேசுகிறது. ஏறத்தாழ 40ஆண்டுகள் சேவைப் பணிகளின் முடிவில் 1934ஆம் ஆண்டு ஓய்வு பெற்று ஐயர் தாயகம் திரும்பும் வேளையில், ஈரோட்டின் பிரதானமான பெருந்துறை சாலைக்கு இவர் நினைவாக 'பிரப் சாலை' (Brough Road) என்று ஈரோடு நகரசபை தீர்மானம் கொண்டுவந்தது. (p. nos. 81-86, A History of the London Missionary Society -1895-1945 - Norman Goodall, 1954.)

ஏறத்தாழ 90 ஆண்டுகள் நிலைத்த இந்த புகழ் வாசகம் எங்கள் அனைவரின் எதிர்ப்புகளையும், எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும், புறந்தள்ளிவிட்டு, மத்திய பாசிச அரசின் பாதந்தாங்கி மாநில அரசால், வாக்கு அரசியல் லாப கணக்குகளைப் பார்த்து, ஆங்கில பெயர்களை மாற்றுகிறோம் என்ற போர்வையில், கிறிஸ்தவ விரோதமாக, "மீனாட்சி சுந்தரனார் சாலை" என்று அந்த சாலையின் பெயர் மாற்றங் கண்டது எங்களின் ஏமாற்றமே.



**ஈரோடு வெள்ளைத் தமிழர் சங்கை H. A. பாப்லி ஐயர் (Rev. Herbert Arthur Popley -1879-1960):**

ஈரோட்டில் சிறப்பாக பணியாற்றி வந்த சங்கை பிரப் ஐயருக்கு துணையாக சங்கை H. A. பாப்லி ஐயர் 1902 ஆம் ஆண்டு ஈரோடு வந்து சேர்ந்தார். சங்கை பாப்லி ஐயர் காஞ்சிக் கோயிலை தனது பணியிடமாக வைத்து ஆரம்பத்தில் பணிசெய்துவந்தார். ஐயர் தமிழ் மொழியை நன்கு கற்று அதில் புலமை பெற்று விளங்கினார். தமிழ் மறையாம் திருக்குறளை ஆங்கிலத்தில் "The Sacred Kural or The Tamil Veda of Tiruvalluver" என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இவரது மற்ற இரண்டு சிறந்த புத்தகங்கள் "The Music of India" மற்றும் சேலத்துச் செம்மல் K. T. பால் அவர்களைப் பற்றிய "K. T. Paul Christian Leader" என்ற புத்தகம். இவரது பிரசங்கங்கள் கதா காலட்சேபம் போல இருக்கும். இசை வழியில் நற்செய்தி பணியாற்றி கிறிஸ்தவத்தை வளர்த்தார். 1905 ஆம் ஆண்டு முதல் 1915 ஆண்டு வரையிலான பத்தாண்டு காலகட்டத்தில் கிறிஸ்தவம் ஈரோடு பகுதிகளில் மிகவிரைவாக வளர்ச்சியடைவதற்கு இவரது முயற்சிகள், நற்செய்திப் பணிகள், முக்கிய காரணமாக இருந்தது. கீர்த்தனைகள் இயற்றும் திறன்பெற்ற இவர் பல தமிழ் கிறிஸ்தவ கீர்த்தனைகளை எழுதியுள்ளார். இசை வழியில் நற்செய்தி அறிவிக்கும் இறைபணி செய்துவந்த ஐயர் ஒரு சிறந்த வயலின் வித்துவான். இவரது நற்செய்திப் பணிகள் ஒடுக்கப்பட்ட மக்களிடத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அதனால் இவ்வின மக்கள் பெருமளவில் கூட்டங்களாக கிறிஸ்தவம் தழுவினார்கள்.

ஈரோட்டில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கல்வி நிலையங்கள் அமைய உறுதுணையாக ஐயர் விளங்கினார். சங்கை பாப்லி ஐயருடன் நெருங்கிப் பழகியவர்களில் இராவண காவியம் இயற்றிய புலவர் குழந்தை மிகவும் முக்கியமானவர் ஆவார். இவர் பாப்லி ஐயரின் தமிழ் புலமையைப் புகழ்ந்து 'பாப்புலி வெண்பா' பாடினார் (பா+புலி). சங்கை பாப்லி ஐயர் இந்திய YMCA இயக்கத்திலும் பன்னிரெண்டாண்டுகள் (1920-1932) பணியாற்றியுள்ளார். திருத்தொண்டர் பணிகள்






முடித்து ஓய்வுபெற்ற நிலையிலும், ஐயர் தாய்நாடு திரும்பாமல், தனது இறுதிகாலத்தில் குன்னூரில் வாழ்ந்து மரித்தார். இவரின் கல்லறை குன்னூரில் உள்ளது. (வரலாற்றுச் சிறப்பு மிக்க Tiger Hill Cemetery யில் இவரது கல்லறை வரலாற்று அன்பர்களின் தேடலுக்கான சிறப்பிடமாக உள்ளது. )

**ஈரோட்டில் பிரப் தேவாலயம் கட்டப்படுதல்:**

வளர்ந்துவரும் ஈரோடு திருச்சபையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்க கட்டிடம் அமைந்திருந்த பெரிய நிலம்- பயணியர் தங்குமிடமான முசாபரி பங்களாவைச் சேர்ந்த இடம் (A large compound with a bungalow -(containing the sub-collectors bungalow, a stable, kitchen and a well - details from the "Title Deed" date :19-01-1906, Coimbatore ) ஏலம் விடப்பட்டபோது, அந்த 12.66 ஏக்கர் நிலத்தை திருச்சபை தேவைகளுக்காக சங்கை H. A. பாப்லி ஐயர் அரசாங்கத்திடமிருந்து 12,910 ரூபாய்க்கு 1905 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 ஆம் நாள் (Refer: sale certificate: Dated: 12-08-1905, Signed by the then Collector) பொது ஏலத்தில் விலைக்கு வாங்கினார். அரசாங்கத்திடமிருந்து கிரயத்திற்கு வாங்கப்பட்ட இடத்தில் ஆலயம் கட்ட திட்டமிடப்பட்டது. இதற்காக ஈரோடு திருச்சபை மக்கள் உற்சாகமாய் பொருளுதவிகள் செய்தனர். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளிலிருந்து பிரப் ஐயரும் நன்கொடைகள் பெற்றுத் தந்தார். பிரப் ஐயரே இந்த ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

**உண்மை நின்றிட வேண்டும் :**

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இறை நம்பிக்கை இல்லாதவர்கள் என்று இன்று ஈரோட்டில் கூடிவாழும் அனைத்து சமுதாய மக்களும் இந்திய தாயின் பிள்ளைகளே, தங்களுக்குள் சம உரிமை பெற்ற சகோதரர்களே. இவர்களில் அதிக எண்ணிக்கை உடையவர்கள், குறைந்த எண்ணிக்கை உடையவர்கள் என்ற பேதம் இல்லாமல் இந்திய நாட்டின் சட்டத்தின் முன்பு அனைவருமே சம உரிமை பெற்றவர்கள் என்ற இந்த அடிப்படை உண்மைகளை ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

ஈரோட்டில் லண்டன் மிஷன் வரலாற்றுப் பாரம்பரியத்தில் வந்த கிறிஸ்தவ சமுதாய மக்கள் 120 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய அரசாங்கத்திடமிருந்து, தங்கள் பிறர் அன்பு சமுதாய சேவைப் பணிகளுக்காக கிரயத்திற்கு வாங்கி, இன்றுவரை அனுபவத்தில் இருக்கும் இந்த 12.66 ஏக்கர் நிலத்திற்கான ஆதாரங்களும், ஆவணங்களும் பக்காவாக இருக்கும் போது, பாத்தியத்திற்கு என்ன பஞ்சாயத்து வேண்டி இருக்கிறது? இராஜாங்க சபைகளில் உண்மை மேலோங்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். Let good counsel prevails!

**பிரப் ஆலய கட்டுமானப் பணிகள் :**

1928ஆம் ஆண்டு இந்த ஆலயத்திற்கான கட்டுமானப் பணிகள் துவங்கி, ரூபாய் 50,000 மொத்த செலவில் ஆலயம் 1929ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. இந்த ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது கட்டுமானங்களை மேலான உயரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சங்கை பிரப் ஐயரின் துணைவியார் திருமதி. ரோசட்டா ஜேன் ஜூலி அம்மையார் (Mrs. Rosetta Jane Julie Brough) தவறி விழுந்து பலியான சோகச் சம்பவம் இந்த ஆலய வரலாற்றில் ஒரு துயரமான பக்கம். ரோசட்டா அம்மையார் இந்த ஆலய வளாகத்திலேயே அப்பொழுது அடக்கம் செய்யப்பட்டார். அவரின் கல்லறையில் எழுதப்பட்ட வாசகம் : "Loving Memory of Mrs. Rosetta Jane Brough died 18th june 1928" என்பதே. இந்த அம்மையாரின் நினைவாகவே இந்த ஆலயத்தின் பிரசங்க பீடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்தோ-சார்சேனிக் கட்டிடக்கலை பாணியில் இஸ்லாமிய மசூதி போன்ற தோற்றத்தில் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு, தோர்ணக்கல் பேராயர் பேரருட்திரு. வேதநாயகம் சாமுவேல் அசரியா அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டு, 1929ஆம் ஆண்டு இறையன்பர்கள் வழிபாட்டிற்காக திறக்கப்பட்டது. (p. no. 66 -73 - ஈரோடு மாவட்டத்தில் லண்டன் மிஷன் வரலாறு - டாக்டர். ப. ஜோதிபாக்கியம், முதல் பதிப்பு - ஆகஸ்டு 2006, பால்ஸ் பப்ளிகேஷன்ஸ், ஈரோடு. )

**ஈரோடு கோஷா மருத்துவமனை :**

ஈரோட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ சேவையின் அவசியத்தை திருத்தொண்டர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். 1909ஆம் ஆண்டு சகோதரி மைபான்வி ரீஸ் (Miss. Myfanwy Rees) லண்டன் திருத் தொண்டர்களில் முதல் மருத்துவத் திருத்தொண்டராக ஈரோடு வந்தார். பிற்காலத்தில் இவர் சங்கை T. C. விட்னி ஐயரைத் திருமணம் செய்துகொண்டார் (afterwards Mrs. T. C. Witney). இவருக்குப் பின்பு மருத்துவத் திருத்தொண்டராக டாக்டர் ஹில்டா போலார்ட் அம்மையாரும் (Dr. HildaM. Pollard), ஆறு ஆண்டுகள் கழித்து செவிலியர் கண்காணிப்பாளராக வந்துசேர்ந்த சகோதரி எட்னா பேக்கர் அம்மையாரும் (Sis. Edna Baker), இந்த மருத்துவப்பணியில் இணைந்து கொண்டனர்.

ஈரோட்டில் புதிய மகத்துவமான கோஷா மருத்துவ

மனைக்கான அடிக்கல் 28-10-1912 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் திரு. R. ஹெம்மிங்வே அவர்களால் நாட்டப்பட்டது. பணிகள் முடிவடைந்து 1919ஆம் ஆண்டு மருத்துவமனை செயல்பாட்டிற்கு வந்தது. திரு. ஆர்த்திங்டன் (Mr. Arthington) என்பவர் எழுதிவைத்த உயில் தொகையில் இந்த மருத்துவமனை கட்டப்பட்டது. (Hospital buildings were Rev. Brough's work -with financial help from the Arthington Fund). இந்த மருத்துவமனை முற்றிலுமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இதில் பயன்பெற்றவர்கள் பெரும்பாலும் முஸ்லீம் பெண்கள். அவர்கள் கோஷா (முக்காடு) அணிந்து கொண்டு வருவதால் கோஷா ஆஸ்பத்திரி (Gosha Hospital) என்ற பெயர் இந்த மருத்துவமனைக்கு உண்டானது.

1931 ஆம் ஆண்டு புறநோயாளர் பிரிவு உண்டாக்கப்பட்டது. 1933 ஆம் ஆண்டு இந்த மருத்துவ மனையில் உள் நோயாளியாக இருந்து குணம் பெற்ற திருமதி. வெங்கட்ட ராமசாமி கவுண்டர் அம்மாவின் நன்கொடை மூலம் இந்த மருத்துவமனைக்கு மின் விளக்கு வசதி செய்யப்பட்டது. பின்னர் 1937ல் கர்நாடகத்திலிருந்து மின் இணைப்பு (Hydero electric) வந்தது. 1933ல் செவிலியர் பயிற்சிப்பள்ளி




இந்த மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டது. மொடக்குறிச்சி என்ற இடத்தில் ஒரு கிராம மருந்தகமும் (Village Dispensary), பெருந்துறையில் ஒரு காசநோய் மருத்துவமனையும் (Tuberculosis sanatorium at Perundurai) இருந்தது.

### சென்னிமலை ஹெர்பர்ட் பிரப் நினைவு மருத்துவமனை (Herbert Brough Memorial Hospital Chennimalai):

முதலாம் உலகப்போரில் வீரமரணம் அடைந்த தனது மகன் ஹெர்பர்ட் பிரப் நினைவாக பிரப் ஐயர் சென்னிமலையில் கட்டிய இந்த மருத்துவமனை. (Report -Rev. Norman Goodall, M. A., after a secretarial visit to India- Sep. 1837-April 1938, London, 1938)

20 படுக்கைகள், மற்றும் சிறப்பு வசதிகள் கொண்ட இந்த மருத்துவமனை தற்பொழுது செயல்படாத நிலையில் மூடப்பட்டு இருக்கிறது. ஆண்களுக்கு மற்றும் பொது மருத்துவ உதவி தரத்தக்கதாக இந்தப் பகுதியில் ஒரு மருத்துவமனையாக இது விளங்கியது. இந்த மருத்துவமனையோடு இணைந்த தொழுநோயாளர்களுக்கான மருத்துவ மையமும் (Leprosy Centre) பிற்காலங்களில் இங்கே செயல்பட்டது. தொழுநோயாளர்களுக்கு வாரத்தில் இருமுறை மருத்துவம் பார்க்கப்பட்டது. அப்பொழுது அவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. ஆனால் 1959ஆம் ஆண்டு இந்த மையம் மூடப்பட்டது.

### ஒடுக்கப்பட்டோருக்கான குடியேற்றங்கள் – அடைக்கல நகரங்கள்:

ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை குறித்து திருத்தொண்டர்கள் மிகுந்த கவலை கொண்டிருந்தனர். நிலமற்ற கூலித் தொழிலாளர்களான இவர்கள் துயர்துடைக்க அரசாங்கம் உதவவேண்டும் என்று திருத்தொண்டர்கள் கோரிவந்த நிலையில், சென்னை மாகாண அரசும் இந்த விஷயத்தில் தீவிரம் காட்டியது. சென்னை மாகாண அரசு 1918 -19 ஆம் ஆண்டுகள் கால கட்டத்தில் காட்டு நிலங்களில் பல குடியிருப்புகளை இவர்களுக்கென அரசு திருத்தொண்டர்களின் மேற்பார்வையில் உருவாக்கித்தந்தது (The Settlements have been established on disafforested lands made available by Government for the depressed classes). . நிலமற்றவர்களுக்கு இங்கே வீட்டு நிலம் கொடுக்கப்பட்டதோடு, அவர்கள் விவசாயம் செய்யவும் நிலம் வழங்கப்பட்டது. சங்கை பிரப் ஐயர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களினத்தைச் சேர்ந்த முதல் குருவான கனம் G. ஞானமுத்து (Rev. G. Gnana muthu) ஆகியோரின் ஓயாத முயற்சிகளால் இந்த குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இதுவே ஈரோடு பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மிக முக்கியமான சாதனை மற்றும் பரிசோதனை முயற்சியின் குடியேற்றங்கள் ஆகும். (An important experiment in the work of the Erode district - villages of a new type referred as Settlements. In one of these commemoratively named Brough Nagar). (p. nos. 56, 57 - Report - Rev. Norman Goodall, M. A. -after a secretarial visit to India September, 1937-April, 1938, London, 1938)

எட்டு குடியேற்றங்கள் ஈரோடு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு, இந்த மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த திருத்தொண்டர்களின் பெயர்களே இந்த கிராமங்களுக்கும் சூட்டப்பட்டது. அவை 1. கிரே நகர், 2. சிலேட்டர் நகர், 3. சமாதானபுரம், 4. பிரப் நகர், 5. சத்தியாபுரம், 6. கருணாம்பதி, 7. ஞானபுரம், 8. எல்லீஸ்பேட்டை, என்பவைகளே. பல ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது மனைவியும் எல்லீஸ்பேட்டைக்கு ஒரு விஜயம் மேற்கொண்டது இன்றும் என் மனதில் பசுமை மாறாத நினைவுகளாய் நிலைத்திருக்கிறது.

### அனைவருக்குமான கல்வி –பள்ளிக்கூடங்கள்:

அனைவருக்குமான கல்வியும், அனைவருக்குமான மருத்துவமுமே, கிறிஸ்தவம் இந்தியாவிற்கு அளித்த அருங்கொடைகள். அதன் வெளிப்பாடுகளை நாம் ஈரோடு லண்டன் மிஷன் வரலாற்றில் காணலாம். ஆண்களுக்கும், பெண்களுக்குமான தனித்தனியான பள்ளிகள் துவக்கப்பட்டன. 1897ஆம் ஆண்டில் 3 பள்ளிகளாக இருந்தது, 1911 ஆம் ஆண்டு இது 82 பள்ளிகளாக உயர்ந்தது, இதுவே 1923ஆம் ஆண்டில் 94 பள்ளிகளாக உயர்ந்தது. புதிய பள்ளிகளை மேலும் திறப்பதைவிட

திறக்கப்பட்டு, நடைபெற்று வரும் பள்ளிகளைப் பலப்படுத்தி ஒருங்கிணைப்பதே சாலச் சிறந்ததென முடிவெடுக்கப்பட்டது.

சங்கை W. T. M. குளூஸ் ஐயர் (Rev. W. T. M. Clewes) ஈரோட்டில் லண்டன் மிஷன் பள்ளிகளின் கல்வி வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், அரும்பாடுபட்டார். பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளி, ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளி, பிரப் நினைவு மெட்ரிக் பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்று கல்வி வளர்ச்சிக்கு ஈரோட்டில் லண்டன் மிஷன் திருத்தொண்டர்களின் திருப்பணிகள் மகத்துவமானது. இன்று இவைகளை கட்டிக் காப்பாற்றி, மேம்படுத்தி, நிலைநிறுத்துவதே நமக்கு முன்பாக இருக்கும் மிகப்பெரிய சவால்.

### ஈரோடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி :

1925 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட கிராம கல்விக் குழுவின் அறிக்கையின்படி கிராமங்களில் துவக்கப்பட்ட பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஈரோட்டில் துவங்க லண்டன் மிஷன் முடிவு செய்தது. இந்த பயிற்சிப் பள்ளி 1926 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பழைய உயர்நிலைப் பள்ளி இருந்த இடத்தில் துவக்கப்பட்டது. இதற்கான முழு திட்டமும், கட்டுமானப் பணிகளும் பிரப் ஐயரால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி கிராம வாழ்க்கைக்கும், சேவைக்கும், மாணவர்களை தயார்படுத்தும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட கிராம சமுதாயப் பள்ளியுடன் இணைக்கப்பட்டது.

A very important addition to the work of Teacher Training is the establishment of a Bible Training School alongside the Teacher Training Institution, a one-year course in Bible Knowledge. (P. no. 58 - Report by Rev. Norman Goodall, M. A., After a secretarial visit to India, September, 1937-April, 1938, London, 1938) மாணவர்களுக்கு கல்வியின் அடிப்படையைக் கற்றுக் கொடுத்த கிராமப் பள்ளிகளில் தான் லண்டன் மிஷன் திருத்தொண்டர்களின் கல்விப்பணி ஆரம்பமாயிற்று. கிராமக் கல்வியின் முழுமைக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியே அடிப்படையாக அமைந்தது. கல்வி ஒடுக்கப்பட்ட மக்களிடையே மிகச்சிறந்த மாற்றத்தைக் கொண்டுவந்தது. இது ஈரோடு மாவட்டத்தில் ஒரு பெரிய சமுதாயப் புரட்சியையும், சமுதாய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது. (பக்கங்கள் :84, 85 - ஈரோடு மாவட்டத்தில் லண்டன் மிஷன் வரலாறு - டாக்டர் ப. ஜோதிபாக்கியம், முதல் பதிப்பு -2006, பால்ஸ் பப்ளிகேசன்ஸ், ஈரோடு)

### சமுதாய பள்ளிக்கூடங்களும், கூட்டுறவு சங்கங்களும்:

கிறிஸ்தவம் வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பொருளாதார நிலையில் மிகுந்த மோசமான நிலையில் இருந்தனர். சமூக சமத்துவம் இல்லாத நிலைகளில் அவர்கள் மீது சாதீய பாகுபாடு காட்டப்பட்டது. ஊருக்கு ஒதுக்குபுறத்தில் குடிசைகளில் வசித்து வந்தனர். எனவே இவர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்த வேண்டிய அவசியம் திருத்தொண்டர்களுக்கு ஏற்பட்டது. இந்த மக்களின் உயர்விற்கு கிராம கல்வியே மிக தேவையானது என உணர்ந்த திருத்தொண்டர்கள் கிராமங்கள்தோறும் பள்ளிகளை ஏற்படுத்தினர். இல்லங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழில் சார்ந்த வகுப்புகளும் துவக்கப்பட்டது. சங்கை பிரப் ஐயர் சமுதாய பள்ளிக்கூடங்களைத் (Community School) துவங்கியபோது அதில் நெசவு பள்ளிகளையும் ஆரம்பித்தார். சமுதாய பள்ளிகளில் விவசாயம், கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற பயிற்சிகள் கற்றுத்தரப்பட்டது. புத்தகம் பைண்டிங் செய்தல், அச்சுப் பணிகள், தச்சு வேலை, தையற் பயிற்சி போன்றவை கற்றுத்தரப்பட்டது. (Community School and Teacher Training School were well known beyond south india for original contributions to the education of rural communities - A History of The London Missionary Society -1895-1945 - Norman Goodall, 1954, p. no. 82)

சங்கை பாப்லி ஐயர் 1912 ஆண்டில் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாத ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் ஈரோட்டில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தினார். இந்த கூட்டுறவு சங்கங்கள் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்துவந்த இந்த மக்களுக்கு பேருதவியாக இருந்தது.

### இறுதி லண்டன் மிஷன் திருத்தொண்டர்கள்:

### சங்கை A. J. டாட்மேன் (Rev. Arnold John Todman, M. A., L. M. S. -(1917-2002)- period of service -1942-65):

அன்று சேலம் அஸ்தம்பட்டி அடைக்கல நகரில் வாழ்ந்துவந்த திரு. காபிரியேல் ஆசிரியர் நான் பள்ளி மாணவனாக இருக்கும்போது என்னை "நீ டாட்மேன் துரையைப் போல நல்ல உயரமாக வளர்ந்து இருக்கின்றாய்; நல்லா படிடா" என்று சொன்னது இன்று என் நினைவில் நிற்கிறது. இதுவே டாட்மேன் ஐயரைப் பற்றி நான் பெற்ற முதல் அறிதல் என்றே சொல்லமுடியும். 1942ஆம் ஆண்டு ஈரோடு வந்த சங்கை டாட்மேன் ஈரோடு, கோவை, சேலம் பகுதிகளில் நற்செய்தி பணியாற்றினார். ஈரோடு மற்றும் சுற்று வட்டாரங்களில் குறிப்பாக பெருந்துறை, பவானி, காங்கேயம், மற்றும் கொடுமுடி ஆகிய பகுதிகளில் ஏறத்தாழ 17 ஆண்டுகள் திருத்தொண்டராக பணிசெய்தார். லண்டன் திருத்தொண்டர்கள் சங்கத்தின் சொத்துக்களை முறையாக கண்டறிந்து CSITA வுக்கு மாற்றம் செய்து நிலைநிறுத்திய பெருமை இவரையே சேரும்.

### சகோதரி ஜாய்ஸ் M. உல்லார்டு அம்மையார் (Sister Joyce Mansfield Woollard, L. M. S. (1923-1997), - period of service -1952-97):

இவர் பெண்கள் மத்தியில் திருப்பணியாற்றும்படி 1952 ஆம் ஆண்டு ஈரோடு வந்தார். லண்டன் மிஷன் பெண் திருத்தொண்டராக ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் பணிசெய்தார். குறிப்பாக சிவகிரி, வாழைத் தோட்டம், காரவலசு, பொரசப் பாளையம், காங்கேயம் பகுதியில் கல்லேரி, ரெட்டிபாளையம் போன்ற கிராமங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஊழியம் செய்து அவர்களுக்கு கல்வி அறிவு கொடுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்தார். இந்தப் பணிகளிலெல்லாம் அம்மையார் மிதிவண்டி மூலமாகவே எல்லா தொலை தூரங்களுக்கும் செல்வது வழக்கம். ஈரோடு பெண்கள்

வி டு தி யி ல்



பொறுப்பாளராக உல்லார்ட் அம்மையார் பணிசெய்தார். கோவைத் திருமண்டலத்தின் பல்வேறு நிர்வாகப் பணிகளில் அம்மையார் தலைமைத்துவம் தந்து வழிநடத்தியிருக்கிறார். கடைசியாக சேலத்தில் அம்மையார் பணிபுரிந்த காலங்களில் அம்மையாரை அஸ்தம்பட்டி அடைக்கலநகர் CSI இம்மானுவேல் ஆலயத்தில் பல முறை பார்த்திருக்கிறேன். லண்டன் மிஷன் திருத்தொண்டர்களில் கடைசி திருத்தொண்டர் இவர். பெங்களூரு CSI பெண்கள் இல்லத்தில் (Vishranthi nilayam) இவர் தங்கியிருந்து சேவையாற்றி வந்த நாட்களில், 24-10-1997அன்று, தான் உண்மையாக இதுவரை சேவித்து வந்த இறை இயேசுவின் திருவடி நிழலின் அடைக்கலம் சேர்ந்தார்.

### பெயர் மாற்றம் என்ற வரலாற்று சிதைப்பு :

சாலைகளுக்கும், இடங்களுக்கும், ஊர்களுக்கும், ஏற்பட்ட, வைக்கப்பட்ட, பேர்களை மாற்றுவது என்பதே உள் நோக்கம் கொண்டது மட்டுமல்ல, சாதீய லாபக் கணக்கைப் பார்ப்பதும் ஆகும். வரலாற்றுப் பெயர்களை மாற்றுவது என்பது நன்றி மறந்த செயலாகும். நன்றிப் பெருக்கோடு, நன்றி பாராட்டும் முகத்தான், நகரசபை கொண்டுவந்து நிறுவிய பெயர்களை மாற்றுவது வரலாற்றை சிதைப்பதே ஆகும். ஒவ்வொரு சாலையின் பெயர்களும், இடத்தின் பெயர்களும், அந்த பகுதியின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு வரலாற்றில் வாழும் மாமனிதர்களின் பெயரைச் சொல்லும்.

ஆங்கில மேலாதிக்க பெயர்கள், ஆங்கில பெயர்கள், என்று துவேஷம் பாராமல், அந்த மாமனிதர் செய்த அரும்பணிகளைப் பார்ப்பதே இன்றையத் தேவை. ஆங்கில வல்லாதிக்கத்தை எதிர்த்தோமே அன்றி, அவர்கள் செய்த நன்பணிகளை நாம் எதிர்க்கவில்லையே! அதனால் தான் இன்றும் நம்மிடையே கர்னல் பென்னி குயிக், கர்னல் எல்லீஸ், தாமஸ் மன்றோ, H. A. பிரட்ஸ், ஆகியோர் அவர்களின் பெயரைச் சொல்லி சிலைகளாக, இடங்கள் மற்றும் சாலைகளின் பெயர்களில் வாழ்கிறார்கள். மேலும் சர்வதேச அளவில் நமது பெருந்தன்மையும் இந்த வரலாற்றுப் பெயர்களை மாற்றாமல் அப்படியே நாம் வைத்திருப்பது வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை! இன்றும் சென்னையிலும், பெங்களூருவிலும், பாண்டிச்சேரியிலும், வரலாற்றுப் பெயர்கள் மாற்றப்படாமல் இருப்பதையும் நாம் அறிந்து கொள்வது நன்று.

கடந்த காலங்களில் ஆங்கிலப் பெயர்களை மாற்றுகிறோம் என்ற போர்வையில் எர்ஸ்கின் ரோடு (இன்று காந்திஜி சாலை), லாட் நேப்பியர் ரோடு (இன்று நேதாஜி சாலை), மெக்வாட்டர்ஸ் ரோடு (இன்று காமராஜர் சாலை), மெக்ரீகர் ரோடு (இன்று சிவசண்முகம் தெரு), வெட்டர்பர்ன் ரோடு (இன்று முத்துரங்க வீதி), பிராடி ரோடு (இன்று ஜின்னா தெரு), பிஷர் ரோடு (இன்று ஆர். கே. வி. ரோடு), வெல்ஸ் பார்க் (இன்று பன்னீர் செல்வம் பார்க்), ஆகியவற்றின் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கிறது.

### ஜூபிலி பார்க்:

பெருந்துறை சாலை (Perundurai Road) என்று அன்று அழைக்கப்பட்ட பிரப் சாலையில், ஈரோடு நகராட்சியின் பொன்விழாவின் போது "Erode Municipal Council Golden Jubilee Park" அமைப்பதற்கு ஆலய வளாக இடத்தை (இப்பொழுது ஆலயம் மற்றும் CSI மருத்துவமனை முன்பாக பிரப் சாலையில் உள்ள இடத்தை) பிரப் ஐயர் அப்பொழுது தானமாக கொடுத்திருந்தார். பூங்காவுக்காக (The land shall be used as the site of a Park, and for no other purpose) என்று கொடுக்கப்பட்ட இந்த இடத்தை பிற்காலத்தில் சாலை விரிவாக்கத்திற்காகவும் (நோக்கம் மாறுபடும் வகையில்) பயன்படுத்திக் கொள்ளப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

1871ஆம் ஆண்டு ஈரோடு நகர் மன்ற கூட்டம் கூட்டப்பட்ட பொழுது அதன் தலைவராக மெக்ரீகர் இருந்தார். அவர் பெயரில் இருந்த சாலையும் (சிவசண்முகம் தெரு) பெயர் மாற்றம் கண்டது.

ஈரோட்டில் மகத்தான சேவைப்பணிகளின் சாதனை மனிதர் சங்கை பிரப் ஐயரை ஈரோட்டின் தந்தை எனவே அன்று மக்கள் அன்புடன் அழைத்தனர். இது ஒரு மாமனிதரின் சாதனை என்று சொல்வதை விட, ஒரு மகத்தான மனிதர் இங்கே வல்லமையாக பயன்படுத்தப்பட்டிருக்கிறார் என்று சொல்வதே சாலச் சிறந்தது. சமயம் கடந்து பொது வாழ்வில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக, மீட்பின் கரமாக பிரப் ஐயர் விளங்கினார். பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், மருத்துவமனைகள், சமுதாய பள்ளிகள், தொழிற் பயிற்சிக் கூடங்கள், ஒடுக்கப்பட்டோருக்கான குடியிருப்புகள், என்று இதில் அனைத்து சமுகத்தினரும் பயன் பெற்றனர்.

### நன்றி பாராட்டிய மக்களும் நகரமன்றமும் :

ஈரோடு நகர சபையின் தலைவராக 1904 ஆம் ஆண்டு முதல் 1905 ஆம் ஆண்டுவரை பணியாற்றிய பிரப் ஐயர், மற்றும் ஒரு பொறுப்பாக ஈரோடு தாலுக்கா போர்டின் முதல் தலைவராகவும் பணிசெய்து புகழ்பெற்றார் (First non-official President of the Taluq Board of Erode). இப்படி ஏறத்தாழ 40ஆண்டுகளின் மகத்தான சேவைப் பணிகளின் இறுதியில் சங்கை பிரப் ஐயர் ஓய்வு பெற்று இங்கிலாந்து திரும்பும் வேளையில் ஈரோடு நகர் மற்றும் மாவட்ட பகுதிகளின் மக்களும் தங்கள் நன் மதிப்பையும், நன்றியையும் தெரிவித்தனர். (The evident esteem in which he is held by all classes in the town and dis-

trict is a high tribute to the quality of service he has thus rendered - p. no. 19, London Missionary Society, minutes of a meeting of the South India Central Committee held at Coimbatore, January 11-18, 1934, Madras, 1934.) இதற்கெல்லாம் சிகரம் வைத்தார் போல, ஈரோடு நகர சபையின் தலைவரும், உறுப்பினர்களும், ஒன்றுகூடி பிரப் ஐயரின் பணிகளுக்கு நன்றி பாராட்டும்படியாக, பிரப் தேவாலயமும், கோஷா மருத்துவமனையும், மற்றும் கல்வி சேவை கட்டுமானங்களும், நிறைந்த ஆலய வளாகம் அமைந்திருக்கும் பெருந்துறை சாலைக்கு "பிரப் சாலை" (Brough Road) என்று பெயர் வைத்து தீர்மானம் நிறைவேற்றியது இங்கே குறிப்பிடத் தக்கது. (Erode Municipal Council Resolution -"Your work in the cause of local self-government has been indeed a land mark in our progress. You have been a central figure in social life of this town. As a humble tribute to your work amidst us the council has decided to name the "Perundurai Road" as "Brough Road" -The Chairman and members of the Erode Municipal Council.

**'பிரப் சாலை'யின் பெயர் மாற்றமும் எதிர்ப்புகளும் :**

கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் அனைத்து நன்மையான வரலாறுகளையும், எதிர்ப்புகளையும், தள்ளிவிட்டு அன்றைய தமிழ்நாட்டின் எடப்பாடி பழனிசாமி அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை மகிழ்வித்து, அவர்கள் ஆதரவைப்பெற இந்த மாமனிதரின் பெயரை தியாகம் செய்யத் துணிந்தது ஈரோடு வரலாற்றிற்கும், கிறிஸ்தவத்திற்கும் செய்த மாபாதகம்.

இதை அறிந்த உடன் சேலம் வரலாற்றுச் சங்கம் தனது எதிர்ப்பை நாளிதழ்கள் வாயிலாகவும் (Renaming of Brough Road opposed - The Hindu - March 4, 2019), எதிர்ப்பு கடிதம் வாயிலாகவும் ('பிரப் ரோடு பெயர் மாற்ற அறிவிப்பை நீக்கக் கோரிய விண்ணப்பம் - 5-3-2019) தெரிவித்தது. ஈரோடு பிரப் திருச்சபையினரும் மகத்தான தொடர் போராட்டங்களை முன்னெடுத்துப் போராடினர். ஆனாலும் எல்லா முயற்சிகளும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல பயனற்றுப் போனது. இருந்தாலும் தளர்வடையாத நாங்கள் 4-2-2023 அன்றும் தற்போதைய தமிழ்நாட்டு அரசாங்கத்திடமும் கோரிக்கையை வைத்தோம். ("Plea to Rename Meenatchi Sundaranar Road in Erode as Brough Road" - The Hindu -March 10, 2023 ) அதற்கான பதிலாக "பிரப் ரோடு" என பெயர் மாற்றம் செய்வது குறித்து அரசே முடிவு செய்யும் " என 24-4-2023 ல் பதில் வந்தது. இந்த போராட்டம் தொடர்கிறது.

**மகிமையின் சேவைப் பட்டியல் (Roll Call of Honour) :**

'இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர் - நஷ்டப்பட்டதில்லை!' - சகோ. Dr. எமில் ஜெபசிங்

சங்கை பிரப் ஐயருக்குப்(Rev. A. W. Brough -சேவைக் காலம்-1894-1934) பின்பு அநேகம்பேர் கோவை, ஈரோடு, சேலம் பகுதிகளில் கிறிஸ்துவின் இராஜ்ய மேன்மைக்காக, சுவிசேஷ பிரபல்யத்திற்காக, தன்னலமற்று, உழைத்திருக்கிறார்கள். அவர்களில் பிரப் ஐயரின் முதல் மனைவி பிரப் ஆலய கட்டுமானப் பணிகளின் போது மேலிருந்து தவறி விழுந்து மரித்துப்போன திருமதி. ரோசட்டா பிரப் அம்மையார் (Mrs. Rosetta Jane Brough) (மறைவு -1928) இங்கே நினைக்கிறோம்; அவருக்குப் பின்பு பிரப் ஐயரின் இரண்டாவது மனைவி திருமதி இங்லிஸ் பிரப் அம்மையார் (Mrs. Inglis Brough), சங்கை பாப்லி ஐயரும் அவரது மனைவியும், அதேபோல சங்கை T. C. விட்னி ஐயர் (Rev. Thomas Charles Witney, L.M. S.) மற்றும் அவரது மனைவி திருமதி. ரீஸ் விட்னி (Mrs. Myfanwy Dyfed Rees Witney),, சங்கை குளுவ்ஸ் ஐயர் (Rev. W.T.M, Clewes), மற்றும் அவரது துணைவியார் ஆகிய இவர்கள் தம்பதிகளாக ஈரோடு பகுதிகளில் உழைத்தவர்கள்.

பெண்கள் மத்தியில் அவர்களின் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்காக உழைத்த தன்னலமற்ற திருத்தொண்டர்கள் சகோதரி மார்கரெட் லாட்ஜ் (Miss. M. Lodge), சகோதரி போலார்ட் அம்மா (Miss. H. M. Pollard), சகோதரி பால்சா (Miss. Falshaw), சகோதரி வுட் அம்மையார் (Miss. H. M. Wood), சகோதரி சாண்டர்ஸ் (Miss. K. F. Sanders), சகோதரி பிராட் (Miss. H. Pratt), சகோதரி பிரௌன் (Miss. K. Brown), சகோதரி ரைஸ் (Miss. D. Rice), சகோதரி ஹெலன் மே (Miss. Helen May), சகோதரி ஸ்டீபன்ஸ் (Miss. D. Stephens), சகோதரி வெல்போர்ட் (Miss. Wellford), சகோதரி கிர்பி (Miss. I. Kirby ), சகோதரி ஃப்ளோரைட் (Miss. J. E. Plowright), மற்றும் இந்தியரான சகோதரி ஆரோன் ஆகியோரின் பணிகளின் தியாக சரித்திரம் மிக்ஷன் வரலாற்றின் ஏடுகள் சொல்லும்.

இந்த காலகட்டத்தில் அதாவது 1930-35 ஆகிய ஆண்டுகளின் காலம் குருமார்களாக பணியாற்றிய சங்கை. H. W. தியோபால்ட் (Rev. H. W. Theobald, M. A.) மற்றும் அவரது மனைவி. இவர்களைப் போன்றே சங்கை. J. C. மெக்கில்வ்ரே (Rev. J. C. McGilvray, B. A. -1935) ஐயரும் இங்கே குறிப்பிடத்தக்கவர்.

1940 களில் இளம் லண்டன் மிஷன் குருமார்களாக கோவை, ஈரோடு மற்றும் சேலம் என எல்லைகளை விரிவாக்கிக் கொண்டு உழைத்த சங்கை A. J. டாட்மேன் (Rev. A. J. Todman, L. M. S.) மற்றும் அவரது துணைவியார் திருமதி. மார்கரெட் டாட்மேன். இவர்களைப் போலவே ஒன்றிணைந்து பணியாற்றிய சங்கை D. P. காலின்ஸ் (Rev. Donald Pickering Collins, L. M. S.) மற்றும் அவரது துணைவியார் ஆகியோரின் சேவைப் பணிகள் இந்தப் பகுதிகளில் என்றென்றும் நினைக்கப்படும்.

இந்திய குருமார்களின் சேவைப் பட்டியலில் அருள்திரு. G. ஞானமுத்து, அருள்திரு P. தங்கமுத்து, அருள்திரு. S. கோலோப், அருள்திரு. L. I. ஸ்டீபன், அருள்திரு. K. S. சுப்பாராவ், அருள்திரு. G. சிமியோன், அருள்திரு. G. எசேக்கியல், அருள்திரு. P. C. கிராஸ், அருள்திரு. K. வெங்கோப ராவ், அருள்திரு. S. ஞானமணி, அருள்திரு. P. R. சாமுவேல், மற்றும் அருள்திரு. J. D. மனாசே ஆகியோர் முன்னோடியாக ஈரோடு, கோவை மற்றும் சேலம் பகுதிகளில் உழைத்தவர்கள். இவர்களுக்குப் பின்பும் அருள்திரு. தானியேல், அருள்திரு. சேனாரூபஸ், அருள்திரு. U. J. எபிநேசர் மற்றும் அருள்திரு. R. தேவாசீர்வாதம் ஆகியோர்

ஈரோடு, கோவை மற்றும் சேலம் பகுதிகளில் முன்னோடியாக சேவைப் பணிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

**நினைவுகளிலிருந்து:**

அருள்திரு. P. R. சாமுவேல் (Rev. P. R. Samuel) சேலம் பகுதியில் இந்திய குருவானவராக இருந்த பொழுது, எங்கள் அஸ்தம்பட்டி அடைக்கல நகர் இம்மானுவேல் ஆலயத்தில் திடப்படுத்தல் புதுநன்மை வைபவத்தில் பேராயர் A. J. அப்பாசாமி படித்த மாணவர்களுக்கு திடப்படுத்தல் கொடுக்க, சபை குருவானவராக அருள்திரு. P. R. சாமுவேல் ஐயர் இணைந்திருந்ததை எனது அப்பா காலஞ்சென்ற திரு. I. ஜேம்ஸ் ரத்தினம் (1933-2024) நினைவுகூர்ந்து சொன்னதை இப்பொழுது நினைக்கிறேன். அப்பொழுது நமது திருச்சபை “தென் இந்திய ஐக்கிய சபை” என அழைக்கப்பட்டது. அப்பொழுது சபை குரு கையொப்பம் இட்ட “சேலம் தென் இந்திய ஐக்கிய சபை பூரண உரிமைசாட்சி” என்ற சான்றிதழ் திடப்படுத்தல் பெற்றவர்களுக்கு 13-02-1949 அன்று அந்த நாளில் வழங்கப்பட்டது. அந்த சான்றிதழை பத்திரமாக என் அப்பா பாதுகாத்து வைத்திருந்தார். இன்று அது ஒரு வரலாற்று ஆவணம்.

**முடிவுரை :**

ஈரோட்டில் லண்டன் திருத்தொண்டர்கள் சங்கத்தின் பணிகள் 1830-36 ஆகிய ஆண்டுகள் கால கட்டத்தில் துவக்கம் கண்டது. இங்கு திருச்சபை வரும் காலங்களில் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான அடித்தளத்தை அன்று தனது தீர்க்கமான தொலைநோக்குப் பார்வையில் அமைத்துத் தந்த முதல் திருத்தொண்டர் சங்கை W. B. ஆடிஸ் அவர்களே. திருச்சபைகள் சுதேச திருச்சபைகளாக வளர்ந்து பெருக இன்றைக்கு ஏறத்தாழ 200ஆண்டுகளுக்கு முன்பே இப்படி அஸ்திபாரமிட்டவர் இவர்தான்.

சங்கை A. W. பிரப் ஐயரின் வருகை ஈரோடு மிஷன் பகுதிக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. ஏறத்தாழ 40 ஆண்டுகள் பிரப் ஐயர் ஈரோட்டிலேயே தங்கி சமய மற்றும் சமுதாயப்பணிகளை மிகத் தீவிரமாக முன்னெடுத்தார். ஈரோடு மிஷன் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டது.

சங்கை H. A. பாப்லி ஐயரின் வருகை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் வாழ்வளிப்பதாக அமைந்தது. கிராமங்களில் மக்கள் இயக்கம் மிக வேகமாக உருவெடுத்தது. மக்கள் கூட்டங்களாக சபையில் சேர்ந்தனர். ஈரோட்டிற்கு இவர்கள் இருவரே என்ற நிலையில், ஈரோட்டின் இன்றைய திருச்சபை வளர்ச்சிக்கு அன்றே அடித்தளமிட்டவர்கள் பிரப் ஐயரும், ஈரோட்டின் வெள்ளைத் தமிழன் பாப்லி ஐயருமே என்றால் அது மிகையாகாது.

மக்கள் வாழ்வுதேடி நகரங்களை நோக்கிப் போகும் காலத்தில், லண்டன் திருத்தொண்டர்கள் கிராம மக்களைத் தேடி கிராமங்களுக்குச் சென்றனர்; இது அன்று நடந்த புதுமை! லண்டன் திருத்தொண்டர்கள் கிராமங்களில் கல்விக்கே முதலிடம் கொடுத்தனர். சமூக விடுதலைக்கான, சமத்துவத்திற்கான, சகோதரத்துவத்திற்கான அடிப்படை கல்வியே என உணர்ந்து அன்றே “ஊர்தோறும் பள்ளிகள்” என்று அமைத்தனர். அங்கே ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் கற்றுத்தரப்பட்டது. அரசு உதவியுடன் அடைக்கல நகரங்கள் என்ற குடியிருப்புகள் அங்கே வீட்டிற்கும், விவசாயத்திற்கும் நிலங்கள் இது மிகப்பெரிய சமுதாயப் புரட்சி. மக்களின் தன்னம்பிக்கையை வளரச்செய்ய அவர்களுக்கு கைத் தொழிற் பயிற்சியும் தரப்பட்டது அன்று.

திருச்சபைகளை வழிநடத்த ஆசிரியர் – உபதேசியார் (Teacher-Catechist) பள்ளிகளிலும் வழிபாடுகளிலும் இவர்கள் திருத்தொண்டர்களுக்கு உதவியாக செயலாற்றினார்கள். சில நேரங்களில் ஆசிரியர்கள் தங்கள் பள்ளிக்கூட பணிகளை விட்டுவிட்டு முழுநேர நற்செய்தி பணியாளர்களாக புறப்பட்டனர். சுதேச போதகர்கள் அதாவது நாட்டையர்கள் (Native Priests) தேவை என்பதை உணர்ந்த திருத்தொண்டர்கள் அநேக இந்தியர்களை அருட்பொழிவு கொடுத்து உருவாக்கியது இந்திய மயமாக்கலிலும், சுய சார்பிலும் முன்னோடியாக விளங்கியது. இப்படி முதன்முதலாக ஒடுக்கப்பட்ட மக்களிலிருந்து சுதேச ஆயராக 1909ஆம் ஆண்டில் பொறுப்பு பெற்றவர்தான் அருள்திரு. G. ஞானமுத்து என்பவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

எல்லா வகைகளிலும் இப்படி சிறப்பாக திருத்தொண்டர்களால் அற்புதமாக உருவாக்கப்பட்ட நமது திருச்சபை, சமுதாய சேவை அமைப்புகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், பயிற்சி நிலையங்கள், குறிப்பாக ஆசிரியர்களை உருவாக்கும் நூற்றாண்டு காணும் ஆசிரியர் பயிற்சிப் பயிலகம் (Centenary-1926-2026, CSI Teacher Training Institute, Brough Road, Erode) இவைகளை எல்லாம் தாங்கி நிற்கும் திருத்தொண்டர்களின் இரத்தமும், வியர்வையும் கலந்திருக்கும் திருச்சபை நிலங்கள், என்று இவைகள் இன்று அநேக சவால்களை வெளியிலிருந்தும் உள்ளேயிருந்தும் சந்தித்து [illegible] இவைகளை [illegible] வென்றெடுத்து, பாதுகாத் [illegible] பாதையில் நாம் செ [illegible] ப்பணிக்க இந்த த [illegible] றேன்.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,

கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,

பங்களாச் சுரண்டை-627859,

தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)

04633 290401, 91767 80001

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

தமிழகக் கிறிஸ்தவ திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1780 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

christianhistorical@gmail.com



# தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்

**250 – வது பிறந்த நாள் விழா உரை**

தொடர்ச்சி....

**கிறிஸ்துவின் சிலுவை பயணத்தில் தஞ்சாவூர்**

தன்னை 'நெல்லையான்' என்றே அழைப்பதில் மகிழ்வு கொண்ட வேதநாயகம் சாஸ்திரியார் வெகு சொற்பமாகவே 'தஞ்சையை' கையாள்வார்.

**'செஞ்சோதி நாட்டான்**
**திருப்பத்தூர் கோட்டை கட்டத்**
**தஞ்சாவூருக்குத்**
**தனி வழியே போறானோ'**

-- பிராலப ஒப்பாரி, சிலுவை நடை, கவி 70.

**செஞ்சோதி நாட்டான் - சிவந்த ஒளிபொருந்திய**

**நாட்டையுடையவன் - விண்ணிலிருந்து வந்த பிதாவின் மகன் -இயேசு கிறிஸ்து**

**திருப்பத்தூர் - திருப்பற்றூர் - திரு+பற்று+ஊர் - பரலோகம்**

**தஞ்சாவூர் - தன்சாவூர் - தன்+சாவு+ஊர்**

**பொருள்:**

செஞ்சுடர் ஒளியாகிய கடவுள், இயேசு கிறிஸ்து என்னும் மனிதனாகி வந்து, மக்கள் உள்ளங்களில் திரு பற்று ஊர் கோட்டை (மறுமை வாழ்வு) கட்டுவதற்காக சிலுவை மரத்தை சுமந்துக் கொண்டு தம் சாவுக்கு, தம் சாவு ஊருக்கு (தஞ்சாவூர்) அதாவது கபால மலை என்ற கொலை களத்திற்கு செல்கிறார்.

மேலும் இதில் வேதநாயகம் சாஸ்திரியார் தன் வாழ்வின் சாயலையும் இணைத்து, கிறிஸ்துவின் பணி செய்ய தான் பிறந்த சொந்த ஊரைவிட்டு, தான் மரணமட்டும் வாழ்ந்த, தன் சாவு ஊராகிய தஞ்சாவூருக்கு தன்னந்தனியாக சுவாட்ஸ் ஐயருடன் புறப்பட்டு வந்ததையும் நினைவுகொள்கிறார்.

**நிந்தாஸ்துதி:**

**நிந்தாஸ்துதி என்பது இகழ்வது போல புகழ்வது ஆகும்.**
**'கள்ளமற்று உனையே செபத்தினால் பிடித்துக்**
**கருத்தாணி கடாவி வைத்திருந்தாற்**
**கடந்துபோம் வழியுனக்கில்லை**
**எழில் பெரு சீயோன் மகள் மணவாளா**
**இறைவனே இயேசு நாயகனே.'**

-- ஜெபமாலை 25, கவி 12

**பொருள்:**

ஊக்கமாக உள்ளான உண்மை ஜெபத்தினால் உன்னை பிடித்து மனத்தினால் சிலுவையில் அறைந்து கால் கரத்தில் ஆணி அடித்து என் மனத்தில் இறுக பற்றிக்கொண்டிருந்தால் என்னைவிட்டு அகன்றுபோகும் வழி உனக்கில்லை... அழகு பொருந்திய சீயோன் மகள் மணவாளா, இறைவனே இயேசு நாயகனே.

**'போதவே பகைத்த அடைக்கலத் தையர்**
**போர் அதிகரிக்கவே வைத்தாய்**
**புண்ணியவானே எத்தனை வேடம்**
**போடுவாய் ஆடுவாயையா**
**ஈதெல்லாம் படுத்தி கோபம் ஆறினபின்**
**எழுப்பி ஆபத்தெல்லாம் முடித்தாய்**

-- ஜெபமாலை 25, கவி 15.

சாஸ்திரியாருடைய வாழ்வில் நிகழ்ந்த அனுபவங்களை இடர்களை நினைத்து இந்த கவியைப் பாடியுள்ளார். தந்தை சுவார்ட்ஸ் ஐயருக்கு பிறகு வந்த அருட்பணியாளர் சிலருடன் சர்ச்சைகள் எழுந்தன. ஜி.யு. போப், ஹாப்ரோ போன்றவர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்களை தன்னுடைய படைப்புகளில் பதிவுசெய்துள்ள சாஸ்திரியார், உள்நாட்டு ஆயர்களுடனும் (நாட்டையர்) போராட்டம் இருந்ததை இங்கு பதிவு செய்கிறார்.

போதுமான அளவு என்னைப் பகைத்த அடைக்கலம் ஐயருடன் போராட்டத்தை அதிகரிக்கச் செய்தாய். புண்ணியவானே எத்தனை வேடம் போடுவாய், ஆடுவாய் ஐயா, இவ்வாறெல்லாம் என்னை துன்பப்படுத்தி கோபம் ஆறினபின் என்னை எழுப்பி, என் ஆபத்தையெல்லாம் தீர்த்து முடித்தாய் என்று இறுதியில் கடவுள் செய்த இரக்கத்தை நினைவு கொள்கிறார்.

ஆனாலும் இடையில் புண்ணியவானே, எத்தனை

வேடம் போடுவாய், எவ்வளவு ஆடுவாய் என்று இழித்தும் பழித்தும் கூறி, இறுதியில் நீயே கதி என அவர் பாதம் பணிந்து, சீயோன் மகள் மணவாளனே, இறைவனே, இயேசு நாயகனே என்று பழித்து கூறுவது போல கூறி துதித்து நிறைவு செய்கிறார்.

**ஞானத்தச்ச நாடகம்**

சாஸ்திரியாருடைய படைப்புகளில் இது வேறுபட்ட படைப்பாக அமைந்துள்ளது. தனது கற்பனைத் திறத்தினாலும் கற்ற அறிவாலும் இந்நூலை உண்டுபண்ணியுள்ளார். கடவுளால் உலகம் படைக்கப்பட்டதையும், மனித பாவ மிகுதியினால் நோவாவின் காலத்தில் பழைய உலகம் தண்ணீரினால் அழிக்கப்பட்டு, நோவாவும் அவர் குடும்பமும் மாத்திரம் கடவுளால் பேழையில் வைத்து காக்கப்பட்டதையும், அந்த பேழை கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட மரவகை தொடங்கி, அதில் எற்றப்பட்ட விலங்குகள், பறவைகள், பூச்சிகள், அவைகளுக்கான உணவு வகைகள்,

தானியங்கள், மளிகைப் பொருட்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் என பலவற்றை பட்டியலிட்டு கூறுவார். மழை பெய்யத்தொடங்கி நீர் பெருகி அந்த கப்பல் ஏரி, நதி, கடல் என மிதந்து செல்கிற போது அந்த நீரில் நீந்தி துள்ளும் மீன் வகைகளையும் பட்டியலிடுகிறார். அந்த கப்பல் கண்டங்கள், நாடுகள், நகரங்கள், திருமறை கூறும் நகரங்கள், தமிழக நகரங்கள், ஊர்கள் எல்லாம் சுற்றி வந்து அரராத் மலையில் நிறைவு பெறுவதாக விவரித்து பாடியுள்ளார்.

இதனை நோவாவின் பேழை என்ற தலைப்பில் கப்பற்றமிழாக (கப்பல் தமிழ்) விளக்குகிறார். இதன் முகவுரையில், கடவுள் உலகைப் படைத்து அதில் மனிதனுக்கென்று அருளிச்செய்த பலவகை மரங்கள், கனி மரங்கள், பயிர் வகைகள், பலசரக்கு வகைகள், மிருகங்கள், பூச்சிகள், நீர் வாழ் உயிர்கள் எத்தனை எத்தனை என்று நன்றியறிதலோடு உணரவும், குறிப்பாக பிள்ளைகள் அறிந்துக்

கொள்ளவும், புவியியல் பற்றி தெரிந்து கொள்ளவும் இது உதவும். அக்கால கணக்கின்படி ஐந்து கண்டங்களான ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா அதிலுள்ள நாடுகள், நகரங்கள், தீவுகள், பட்டணங்கள் பற்றி கூறப்பட்டுள்ளதால் இதை 'புவன சாஸ்திர கப்பற் றமிழ்' (புவியியல் கப்பல் தமிழ்) என்றும் சொல்லும்படியாக இந்த ஞானத்தச்ச நாடகத்தை படைத்ததாக கூறுகிறார். கி.பி. 1830 ஆம் ஆண்டு இதை குறையற படைத்து, அதே ஆண்டில் சரபோஜியின் அவையில் அவர் முன் அரங்கேற்றியதாக குறிப்பிடுகிறார்.

உலக படைப்புகளில் மனித படைப்பு மகத்துவமிக்கது என்று கடவுள் கூறுகிறார். அந்த மனித படைப்பின் உடற்கூறு (புஜமிமிலிதுதீ) தன்மைகளைப் பற்றி பாடியுள்ள சாஸ்திரியார்; எலும்புகள், நரம்புகள், உறுப்புகள் அதன் செயல்பாடுகள் பற்றியெல்லாம் விவரித்து கடவுள் மனிதனை எத்தனை ஞானமாய் நுட்பமாய் படைத்திருக்கிறார். அவருடைய மனித படைப்பின் சிறப்பினை உணர்ந்து ஞான தச்சனாகிய கடவுளைப் போற்றி துதிக்க வேண்டும் என்கிறார். ஆகையினால் இந்த நூலுக்கு 'ஞானத் தச்சன் நாடகம்' என்று பெயரிட்டு போற்றுகிறார்.

மீதச்சன் - மரவேலை செய்பவன்

**மனித எலும்புகள்**

**'சிரத்தில் அறுபது அஸ்தி**
**கரத்திலே முப்பத்தொன்றாய்ச்**
**செய்ய கரம் இரண்டிலேயும்**
**பொய்யல்ல அறுபத்திரண்டு**
**திட்டமாய் அடிப் பிண்டத்தில்**
**இட்டது அறுபத்தேழு அஸ்தி**
**சேர்ந்த இருகால் துடையில்**
**தீர்ந்த கணக்கு அறுபது'**
**மீஅஸ்தி - அத்தி - எலும்பு**

**மீஅடிப் பிண்டம் - உடலின் அடிப்பகுதி**

**மனித நரம்புகள்**

**'ஆறாஞ் சோடு ருசி நரம்புகள்**
**கூறாம் ஏழு செவி நரம்புகள்**
**அட்டச் சோடு பொது நரம்புகள்**
**திட்டத்து ஒன்பது நாக்கு நரம்புகள்**
**அபபாற் பத்தாஞ் சோடுகளானது**
**ஒப்பாகத் திரள் அவையவம் எய்தும்**
**ஆகத் தலையிற் சோடுகள் பத்துக்கு**

**ஏகத் தொகை வித்தியாசம் இருக்குதோ'**

**சோடு சோடி – ஜோடி**

12 ருசி நரம்புகள், 7 செவி நரம்புகள், 16 பொது நரம்புகள், 9 நாக்கு நரம்புகள் என பகுதி பகுதியாக உருப்புகளின் நரம்புகள் எண்ணிக்கையை வகைப்படுத்தி கூறுகிறார்.

**கப்பல் தமிழ் – நோவாவின் பேழை**

கடவுள் கொப்பேர் மரத்தைக் கொண்டு பேழை செய்வதற்கு நோவாவிற்கு கட்டளையிடுகிறார். அவ்வாறு கொப்பேர் மரத்தைத் தேடி செல்லும் நோவா, எவ்வெவ் வகையான மரங்களை எல்லாம் கண்டார் என்பதை பட்டியலிடுகிறார்.

**மரவகைகள்**

**'அத்தி, ஆல், புங்கு, புளி, பூவரசு, நெல்லி,**
**ஆச்சா, கருங்காலி, குங்குமங், கொன்றை,**
**யித்தி, அகத்தி, கடுக்காய், சோகு,**

**ஈந்து, பேரீந்து, மலை வேம்பு, மஞ்சாடி,**

**உத்தி, எலும்பிச்சை, சீனிநாருத்தை,**
**ஓடை, உசிலை, மா, பலா, வெட்பாலை, வெள்வேல்,**
**முத்தின சண்பகஞ், சந்தனங், கோங்கு,**

**மூங்கில், கூந்தற்பனை, தேங்கு, சாதிக்காய்,**

**மெத்தனத் தேக்கு, அரசு, நறுவிலி, தணக்கு,**
**விளா, வாகை, பெரு நாவல், பாய்மர விருட்சஞ்,**

சித்திரச் சிலை, பாலை, மாவலிங்கம், எட்டி,
தேவதாரி, சம்பு, நாகை, பூவந்தி,

பத்திராட்சம், வில்லை, மாதளை, மருதம், வன்னி,
பாதிரி, புன்னை, மகிள், பன்னீரோடு, ஆத்தி,
வித்திலவு, முள்ளிலவு, வெண்ணொச்சி, தேத்தான்,
வேங்கை, இழுப்பை, இலந்தை, பனை, தான்றி,

துத்தி, அனிச்சை, கடம், பொடகில், காயா,
துரிஞ்சு, குருந்து, சேருந்தி, சீவந்தில்,
நெத்துக் களாச்சி, கொய்யாவுடன், சீத்தா,
நேர்வாளம், அருநெல்லி, பப்பாயி, பூகம்,

கஸ்தானி, யூபிராய், லீபனோன், கேதர்,
காட்டொலிவு, நாட்டொலிவும் கண்ட மரமெல்லாம்
எத்தனை விதங்களோ அத்தனையும் ஆய்ந்தே
ஈதெல்லாங் கப்பலுக்கு ஈடல்லவென்று

கொற்றவன் உரைத்தபடி முற்றும் இயல்பாகக்
கொப்பேர் மரங்களை வாய்ப்பாய்க் கொணர்ந்து
சுத்தத்து அறுத்து இளைத்தே பலகை சேர்த்துச்
சூட்சாதி லட்சவித வேலைகள் இயற்றி

வெற்றியுடன் முந்நூறு முழ நீளமாக
மேல் அகலம் ஐம்பதும் உயரம் முப்பதுமாய்ப்
புத்தி உயர் சித்திர வித்துடன் அமைக்கப் பொறை
முனிவன் கப்பல் சரிவர முகிந்ததப்பா

ஏலேலோ ஏலலல்லோ தத்தையா
ஏலேலோ ஏலலல்லோ.'

கொற்றவன் - கடவுள், அரசன்
சூட்சாதி - நுட்பம், ஆராய்ச்சி, திறமை
லட்சவித- இலக்கண வகை
பொறை - பொறுமை, வலிமை
முகிந்ததப்பா - முடிந்ததப்பா

இவ்வாறு 90 வகையான மரங்களை தேடி ஆராய்ந்து, 91- வது மரமாக கடவுள் சொன்ன கொப்பேர் மரங்களை கண்டு அறுத்து, எடுத்துவந்து பலகைகளாக அதை அறுத்து இளைத்து அவைகளைக் கொண்டு கப்பல் செய்யும் இலக்கண வகைகளை ஆராய்ந்து நுட்பமாய் கடவுள் சொன்ன அளவில் புத்தியாய் நேர்த்தியுடன் கப்பலை செய்து முடித்தான் பொறுமையும் வலிமையும் கொண்ட நோவா முனிவன்.

மேலும் ஞானத்தச்ச நாடகம் நூலில் 49 பூச்சி வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**கப்பல் தமிழ் – பூச்சி வகை**

'நன்னயஞ் சேர் நோவை முனி செய்த
நாவாய் தனிலே அடர்ந்த
வன்னவன்னப் பூச்சிகளின் மகிமை
வகுப்புகள்தான் அனந்தவிதம்.

பட்டுப் பூச்சி, தெள்ளுப்பூச்சி, நூற்பூச்சி,
பறப்பூச்சி, நுரைப்பூச்சி, கோலியப்பூச்சி,
எட்டுகாற் பூச்சி, மாசன்னாசிப் பூச்சி,
இலைப்பூச்சி, மழைப்பூச்சி, ஆறுகாற் பூச்சி,

அட்டைப்பூச்சி, வண்ணத்து வடவாப் பூச்சி,
ஆயிரங்காற் பூச்சி, முருங்கைபூப் பூச்சி,
நெட்டை நாக்கப்பூச்சி, ஒட்டைக்காற் பூச்சி,
நீலப் பூச்சி,பிள்ளைப் பூச்சி, எரிப்பூச்சி,

மட்டை ஓலைப் பூச்சி, பஞ்ச வன்னப்பூச்சி,
மகமைப் பட்டுப்பூச்சி, மலைங்காட்டும் பூச்சி,
கட்டை நெற் பூச்சி, இந்திர கோபப் பூச்சி,
கரும்பூச்சி, மின்னிட்டான் பூச்சி, பாற்பூச்சி,

கொட்டை காய்ப்பூச்சி, ஒடுச காலத்துப் பூச்சி,
குரங்குப் பூச்சி, விளக்கூர்து புற் பூச்சி,
முட்டைப்பூச்சி, மூட்டைப் பூச்சி, பேய்ப் பூச்சி,
முகவிருந்துப் பூச்சி, சிலந்திப் பூச்சிகளும்

தட்டான், ஊசித்தட்டான், செந்தட்டான், ஈசல்,
தடித்தட்டான், கருந்தட்டான், கொடித்தட்டான், பீத்தி,
ஒட்டியான், பலவிதப் புழு, மகிழி, கிரிட்டி,
உண்ணி, சிராயுண்ணி, குடலுண்ணி, நாயீ,

பொட்டு வன்னப் பொன்னீ, விட்டினீ, தேனீ,
பொரி வண்டு, கரி வண்டு, சுழல் வண்டு, முசுறு,
குட்டை வண்டு, தென்னை வண்டு, பொன் வண்டு,
கொடி வண்டு, பேய் வண்டு, பாப்பார வண்டு,

வட்டப் பெருங் கழுதை வண்டு, மரவண்டு,
வரிவண்டு, சிறுவண்டு, வண்ணார வண்டு,
சிட்டை வண்டு, சிராய் வண்டு, நீர் வண்டு,
சிறு குளவி, கருங்குளவி, செவிப்பாம்பு, பாச்சை,

வெட்டுக்கிளி,சுவர் கோழி, கக்காளத்தி,
வெள்ளைப் பேன், சீலைப்பேன், தலையிற் பேன், கொசுகு,
சுட்டெறும்பு, கட்டெறும்பு, சுள்ளெறும்பு மற்றுந்
தொகை தொகையாய்க் கப்பலுக்குள் வருகுது காணப்பா.
ஏலேலோ ஏலலல்லோ தத்தையா
ஏலேலோ ஏலலல்லோ'.

தொடரும்.

நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

யோவேல் 2:26

109,V.O.C MARKET, THOOTHUKKUDI-1

allwinjasmine@gmail.com

9788870389, 9788870388
9788870387, 9894936682

# P.G.T.ஆல்வின் ஜேக்கப் & பிரதர்ஸ்

## FRUITS AND JUICE CENTRE



Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401